பதிவு எண் 2041

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |


வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு மார்கழி மீ 24உ (8—1—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 37.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

அம்சக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற


## விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

| | |
|---|---|
| 20 சாம்பிள் பாக்கெட் | ரூ. 2—0—0 |
| 10 ,, ,, | ரூ. 1—4—0 |
| நாட்டுக் காய்கறி 20 | ரூ. 2—8—0 |

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்கர்சரி தோட்டம், சேலம்.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனாம்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
(... 3, பார்க் டவுன், (தா) சென்னை.

## இந்தியாவின் பூர்வீக மறை ஆராய்ச்சிக்குரிய சிறந்த நூல்கள். மதசீர்த்திருத்தக்காரர்களும் தமிழபிமானிகளும் அவசியம் பார்க்க வேண்டிய புத்தகங்கள்.

| | |
|---|---|
| இந்திரர் தேச சரிதை— ஆரியர் நமது தேசத்தில் வந்து தேசத்தையும், மதத்தையும், மக்களையும், பாழ்படுத்தியதை விவரித்துள்ளது | 0—8—0 |
| விசேஷ சங்கைத்தெளிவு 100 அவசியமும் அருமையுமான சங்கைகளை விளக்கியுள்ளது | 0—8—0 |
| திருவள்ளுவர் உண்மை சரிதமும் அவரது மதமும் | 0—2—0 |
| திராவிடர் பண்டிகைகளின் விளக்கம் | 0—2—0 |
| திராவிடர் விவாகங்களின் விளக்கம் | 0—2—6 |
| கிராம தேவதையான அம்பிகையம்மனின் சரிதை | 0—1—6 |
| ஸ்ரீ கஜமுகனின் உண்மை சரித்திரம் | 0—1—6 |
| ஸ்ரீ முருகனின் உண்மை சரித்திரம் | 0—1—6 |
| அரிச்சந்திரனின் உண்மை சரித்திரம் | 0—1—6 |
| புத்த தருமோபதேச அநுஷ்டான நியமம் | 0—1—0 |
| வஜ்ஜிரசூசி என்னும் ஜாதி கண்டனம் | 0—1—0 |
| நந்தன் சரித்திர விளக்க வினா விடை | 0—2—0 |
| யதார்த்த வேஷ பிராமணர் வேதாந்த விபரம் | 0—4—0 |
| நூதன ஜாதிகளின் உற்பவ பீடிகை | 0—4—0 |
| நிகழ்காலத்திரங்கலும் பெருவ குறவஞ்சியும் | 0—2—6 |
| விபூதி விளக்க வொளியும் கபோலீசர் விபாமும் | 0—0—6 |
| பூர்வத்தமிழொளியாம் ஸ்ரீ புத்தரது ஆதி வேதம். தமிழில் இதைவிட சிறந்தநூல் வேறு கிடையாது கவிகோ வைண்டுசெய்த பெரிய புத்தகம் | 3—0—0 |
| புத்தமார்க்க வினா விடை 1 & 2 | 0—5—0 |
| அசோக சரித்திரம் | 0—4—0 |
| வருணபேத விளக்கம் | 0—4—0 |
| ஸ்ரீ அம்பிகையம்மன் அருளிய திரிவாசகம் | 0—6—0 |

ஸ்ரீ ஸித்தார்த்தா புத்தக சாலை
சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்
கோலார் கோல்ட் பீல்ட்.

Sri Siddhartha Book Depot
Champion Reefs P.O.
Kolar Gold Field S. I.

## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!!

சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனான்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இறும்! இறும்!! இறும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

## (அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உரவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

### இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து தவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

# தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. 1. | ஜெர்மன கம்பிக்கரைப் போர்வை | 1 | ரூ. | 9—8—0 |
| நெ. 2. | பாரீஸ் பூக்கரைப் போர்வை | 1 | ரூ. | 10—8—0 |
| நெ. 3. | ஷை உயர்ந்தது பெரிய சயிஸ் | 1 | ரூ. | 16—0—0 |
| நெ. 4. | காஷ்மீர் கை நெசவுப் போர்வை | 1 | ரூ. | 12—0—0 |
| நெ. 5. | ஜெர்மன் மேகவர்ணப் போர்வை | 1 | ரூ. | 15—0—0 |

கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்

K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

# ஆநந்த குணபோதினி

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள் உள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# மூத்து மநமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்


முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. எழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{2}'' \times 2\frac{1}{2}''$ ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

# ஜீவகாருண்யம் நம் நாட்டில் நடைபெறுவது எப்படி?

[கைவல்யசாமியார் எழுதினது]

சீவகாருண்யமென்பதை விரித்து அநேகர் எழுதியிருக்கிறார்கள். படிப்பினால் தன் கொள்கையே மேல் என நினைத்துக்கொண்டால் விஷயங்களின் உண்மை விளங்காது. மனதை நாலா பக்கமும் ஓட்டி பின் ஒன்றாக்கி அதை உற்று ஆலோசித்தால் பொதுவான விஷயங்களை புத்தி கிரகித்து உண்மையை விளக்கும். வஸ்துக்களைப் பற்றிய புற அறிவு விரைவிலே வந்துவிடும். அகத்தைக் காண்பதோ பல நூற்றாண்டு பழகித் தன்னைக்கட்டிய பின்பு கை கூடும் விஷயம். அன்பின் கனியிலே அதைதன்னைதாங்கிக் கொள்ளுதல் அரிது. அதுவே உண்மையான அறிஞனின் தொழில். இங்குதான் சீவகாருண்யம் விளங்குகிறது. இயற்கைக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு ஆழ்ந்த உள்ளத் தொடர்பு. அதன் அன்பாகிய உயிர்த்தளையை அதன் உலகத்தோடு ஒட்டுகையில் அதன் பொருட்டு நெஞ்ம் திறத்தலால் உண்டாகும் சீவகாருண்யம் நமது புஸ்தகங்களிலுமிருக்கின்றன. குடும்பத்தின் விஸ்தாரம், இருதய விஸ்தாரம் விசாலமான உலகத்தில் நீண்ட காலத்தில் இயல்வதான விஸ்தாரம் இதைப்பற்றின சீவகாருண்யம் நமது புஸ்தகங்களிலுமிருக்கின்றன. ஒரு கொடியைக்கிள்ளாதிருப்பதிலிருந்து தனக்கென்று தேக முதல் எந்த ஒரு சிறு சாதனத்தையும் வைத்துக் கொள்ளாமலிருப்பது வரையிலும் சீவகாருண்யமென்றே நமது புஸ்தகங்கள் சொல்லுகின்றன. சீவகாருண்யம் நீதி கடமை எல்லாம் தத்துவங்களில் சிறிது வித்தியாசப்பட்டாலும் பாத்யதையில் அண்ணன் தம்பியைப் போன்றவையே. வேடனுக்காகப் புறா உயிர் விட்டதும் புறாவுக்காக வேடனுக்கு ராஜா தன் மாம்சத்தை அறுத்துக்கொடுத்ததுமான கதைகளை நமது புஸ்தகங்களில் எழுதியிருப்பது மிகைபடக்கூறல் என்னும் குற்றத்திற்குள் வந்தாலும் உயர்ந்த அர்த்தமுடைய கதையளவில் சொல்லலாமே ஒழிய அனுபோகத்திற்கு ஒத்துவருவதல்ல.

நமது ஏடுகளிலுள்ள சீவகாருண்யத்தை சரியாகச் சன சமூகங்களுக்கு அதிலுள்ள கருத்தின்படி சொல்லவில்லை. எழுதியிருக்கும்ஏடுகள் கோவில் பூசைக்கும் தீர்த்த யாத்திரைக்கும் எழுதப்பட்டுப் பாப்பான் பிழைப்பாகயிருக்கிறதே ஒழிய சீவகாருண்யத்திற்கு உபயோகப்படுவதில்லை. பல கோவிலுக்கு போய்ப் பாப்பானுக்கு வேண்டியதைக் கொடுத்துவிட்டால் எல்லாப் பாவமும் தீர்ந்துவிடுமென்றும் ஜாதி தெரியாமல் தொட்டால் ஆசாரமும் பக்தியும் கெட்டு விடுமென்றும் இருக்கையில் ஜீவகாருண்யம் இந்த ஏடுகளால் எப்படி உண்டாகும்? "இதிகாசங்களில் சிறந்ததான ராமாயணமும் பாரதமும் கேட்டமாத்திரத்திலேயே எல்லா பாவமும் போய் விடும், ராம பஜனை செய்தீர்களானால் சண்டிப்பாய் மோக்ஷம் கிடைக்கும் சுந்தரகாண்டம் பாராயணம் பண்ணினீர்களானால் உங்களுடைய எல்லாத் துக்கங்களும் தீர்ந்து சுக வாழ்வு வாழுவீர்கள் எங்களுக்கு நல்ல கணையாழியும்சேலை வேஷ்டியும பணமுங்கொடுத்தால் புண்ணியம்" என்பதான உபதேசங்களிலும் அதைக்கேட்டு அந்தபடியே நடப்பதான நமது பைத்தியக்காரத்தனத்திலும் என்னசீவகாருண்ய மிருக்கும்? அது போலவே பாரதம் 'துரோபதை மானம் காத்த கிருஷ்ணனைக்கும்பிட்டு அர்ச்சனன் தவநிலைச் சருக்கம் படித்து அவன் வழியில் செய்ததையெல்லாம் மறந்து எனக்கு வேண்டியதை கொடுத்து விடுங்கள்" என்னும் உபதேசத்தை கேட்பதாலும் அந்தப்படி நடப்பதாலும்வரும் சீவகாருண்யமென்ன? சீதைக்கும் துரோபதைக்கும் துக்கம் தீர்ந்தால் நமக்கும் சந்தோஷமே. ராமனையும் கிருஷ்ணனையும் பஜனை செய்வதில நமக்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால் ஜீவகாருண்யம் அடங்கிவிட்டதா? இது போலவே பெரிய புராணமும் கண்ணைப்பிடுங்குவதும் மூக்கையறுப்பதும் குழந்தையின் கழுத்தை ஒடிப்பதும் கையை அறைப்பதும் இதை போன்ற இன்னும் பல கதைகளையுமுடையது. இந்த இடத்தில் சிவபெருமானிடம் வைத்த அன்பால் காட்டின பக்தியை குறைகூற வில்லை. அதல்ல இங்கு விஷயம். அதனால் பக்தியும் மதபற்றுமுண்டாகலாம், ஆனால் அப்புராணம் கற்றுக்கொடுத்த ஜீவகாருண்யமென்ன? புராணம் பதினெட்டும் உபபுராணம் பதினெட்டும் கணக்கற்ற ஸ்தல புராணங்களும் அதைக்கேட்ட மாத்திரத்திலும் அதில் சொல்லப்பட்ட மூர்த்திகளை நினைத்த மாத்திரத்திலும் ஸ்தலத்தை மிதித்த மாத்திரத்திலும் முத்தி கிடைத்து விடுகிறதென்றுசொல்லுகிறபடியால் பின் எந்த ஜீவகாருண்யம் வேண்டியிருக்கிறது! இந்து மதலோக குருவென்போர்கள் எல்லாரிடமும் வாங்கின பணத்தை தம் கூட்டத்திற்கு மட்டும் வயிறு வெடிக்க உண்ணக்கொடுத்து, மற்றவர்களும் கூன் குருடு முடங்களும் பசியோடிருக்கப் பார்த்திருக்கும் லோக குருவாலும் அவர்படித்த சாஸ்திரத்தாலும் சிஷ்ய கோடிகள் லோககுருவின் பாதத்தில் பணம் போட்டால் புண்ணியமென்று கற்றுக்கொண்டதாலும் ஏற்பட்ட ஜீவகாருண்யமென்ன? ஜாதிக்குரு வருஷத்திற்கு வருஷம் வாங்கும் காணிக்கை போக தன் பெண்டாட்டி பிள்ளைகள் ஆடம்பரமாகப் பிழைத்ததால் மடம் கடன்பட்டு விட்டதால் அதைத் தீர்த்தாலே எல்லாப்புண்ணியமும் வந்துவிடுமென்று அதற்கும் பணம் வாங்கப் போகிறான். அதனால் கிடைத்த ஜீவகாருண்யம் என்ன? கோவில் குருக்கள் பலவாறு அபிஷேகத்திற்குப் பலவிதபடி கை எழுதி தாகு நீக்கி கடைக்காரனும் குருக்களும் எடுத்து கொள்வதுமன்றி, குருக்கள் மறுபடியும்கும்பிடவந்தவர்களிடம் தர்க்கம்பண்ணித்தக்ஷணைபெற்றுக்கொள்ளுவதில் இருக்கும் ஜீவகாருண்யமென்ன? எல்லாக் கோவில்களுக்கும் நக்ஷத்திரம் தவறாமல் கட்டளை ஏற்படுத்திக் குருக்கள் வீட்டில் கும்மாளம் போடச்செய்வதால் வரும் ஜீவகாருண்ய மென்ன? புரோகிதர்களுக்குப் பாதரக்ஷையிலிருந்து படுக்கை ரெக்ஷைவரையிலும் கொடுக்கும் தானத்தால் வரப்போகும் ஜீவகாருண்ய மென்ன? காசி கயா ராமேஸ்வரம் முதலிய தீர்த்தக்கரையில் கெட்டுப் போன பாப்பானுக்கும் திம்ப தலையணையில் சாய்ந்துகொண்டே இருக்கும் பண்டாகளுக்கும், அள்ளிக்கொடுக்கும் பணம், பூரிக்கு நெய்யும் புஷ்டிக்கு அல்வாவும் மப்புக்கு குடாக்கும் மயக்கத்திற்கு அபினியுமாகுமே ஒழிய வந்த ஜீவகாருண்யமென்ன? சாகும்போது ஒரு மாடும், செத்த பின் ஒரு மாடும், கருமாந்திரத்திற்கு ஒரு மாடும் பார்ப்பானுக்குக் கொடுத்தால் அந்த ஜீவன் பாவம் நீங்கி சொர்கத்திற்குப் போவதாயிருக்கையில் ஜீவகாருண்ய கவலை ஏன்? தேவாரம் இரண்டு பாட்டும், திருவாய் மொழி இரண்டு பாட்டும் சொல்லி, வில்வமோ துளசியோ விக்கிரகத்தின் தலையில் போட்டு அத்தழையை எடுத்து தன் தலையிலும் வாயிலும் போட்டுக்கொண்டால் பாவமெல்லாம் கடவுள் ஏற்றுக்கொண்டு புஷ்பவிமானத்தை அனுப்புவதாயிருந்தால் சீவகாருண்யத்தின் கவலை எதற்காக? தன் மதப்பற்றுதலுக்கு ஏற்றபடி ஒரு ஏடு எழுதிவிட்டாலும், எழுதி வைத்திருக்கும் ஏட்டிற்கு அர்த்தமெழுதினாலும் அல்லது எத்தனையோ சாமிகளில் ஒரு சுவாமிக்கு பத்துப்பதிகம் எழுதி விட்டாலும், ஜீவகாருண்யம் முதிர்ந்தவர்களாகவே நாம் பாராட்டுகையில் மாணாக்கர்களும் படித்தவர்களும் ஜீவகாருண்யத்திற்கு ஏன் அதிக தூரம் போகவேண்டும்? சாகையில், எவ்வளவு பொருளிருந்தாலும் கோவிலுக்கு சிறிது மானியமோ பாப்பானுக்குச் சத்திரமோ இடிந்த பாழும் கோவிலை கட்டியோ வைத்துவிட்டால் அவன் செத்தவுடன் மோக்ஷத்திற் ஏற்றுவதயிருந்தால் அவன் இனித்தன் பணத்தால் சம்பாதிக்கவேண்டிய ஜீவகாருண்யமென்ன இருக்கிறது? ஏகாதசிக்கு ஸ்ரீரங்கத்திற்கும், திருவாதிரைக்கு சிதம்பரத்திற்கும், கார்த்திகைக்குத் திருவண்ணாமலைத் தீபத்திற்கும், பூசத்திற்குப் பழனிக்கும், ஆடி அம்மாவாசைக்கு ராமேஸ்வரத்திற்கும், இப்படியே ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு கோவிலுக்கும் போய் வந்தால் அந்தப்பலன் அநேக நாள் நிறைந்து கிடக்குமென்று நம்பியிருக்கையில் வேறு சீவகாருண்யம் உள் புக இடமெங்கே? இதையெல்லாம்விட ஒரு தரம் காசிக்குப் போய் கங்கையில் முழுகிவந்தால் எல்லாப் பாவங்களும் நசித்துப் போகிறதென்கையில் ஜீவகாருண்யத்தைப்பற்றி கவலை அவர்களுக்கு ஏன்? இந்த விதமான ஜீவகாருண்யங்களையே நம் சமூகம் நம்பி உபதேசமாகவும், மதமாகவும் செய்து வருகிறது. இதனால் யாதொரு பிரயோஜனமும் இதுவரையிலுமுண்டானது மில்லை; இனி உண்டாகப்போவது மில்லை என்னும்படியான உண்மையை எப்பொழுது தெரிந்து கொள்ளப் போகிறார்கள்? முன் சொன்ன வழிகளிலல்லாமல் இந்து மதம் ஜீவகாருண்யத்தைச் சரியான வழியில் உபயோகித்திருக்கிறதா என்பதை முதலணியில் நிற்கும் தேசங்களைப்பார்த்துக் கவனியுங்கள்.

முப்பத்திரண்டு தர்மமும், வித்வானின் ஜீவகாருண்யப்பாட்டும் ஏடுகளும் எனக்கு தெரியும். கோவில்கள், திருநாட்கள், பண்டிகைகள், ஆசாரங்கள், மந்திரங்கள், பூசைகள், யாகங்கள், என்ன தான் செய்தினும் மனிதன் தன் சக்திக்கு ஏற்றவாறு ஜன சமூகத்திற்குத் தன் கடமையை செய்யாது விட்டால் அவன் கடவுளால் தள்ளப்படுவான் என்னும் சாஸ்திரங்களும் எனக்குத் தெரியும். மனுஷ்ய ஜாதியின் பரம ஐக்யத்தையும் ஆழ்ந்த பந்தத்தையும் சாந்தியையும் தர்மசிந்தையையுமுடையதாய் மனிதர் பரமார்த்தங்களின் பொருட்டுக் காட்டில் கூடிய அந்தக்காலத்தில் எழுதின ஏடுகளை மறைத்துத் தங்கள் அகம்பாவத்திற்கும் காரியத்திற்கும் ஏற்றாப்போல மறைத்த ஏட்டின் பேரால் பல ஏடெழுதி தங்கள் பெருமையும் லாபமும் என்றும் நிலைத்திருக்க அநேக ஏடெழுதி அதையே ஜன சமூகங்களுக்குச் சொல்லி அவர்களை என்றைக்கும் ஒரு பலனும் அடையாத வழிக்குக் கொண்டு வந்து விட்டு இனியும் அதிலேயே புகுத்திக்கொண்டு போகும் ஏற்பாட்டைத் தெரிந்துதான் ஒரு காலும் நன்னிலைக்கு வரமுடியாத குருக்கள் புரோகிதர்கள் இவர்களின் மதமாகிய இந்து மதம் ஒழிய வேண்டுமென்கிறது'குடி அரசு'. பாப்பான்தங்கள் வயிற்றிற்குஉழைப்பில்லாமல்உண்பதற்கு என்ற கடவுள் வழிபாடும் தங்களுக்கே தானமும் கொடுத்து வந்தால் அதனால் எல்லா ஜீவகாருண்யமும் வந்துவிடும் என்கின்ற சிறுவாக்கியமும் இல்லாத புஸ்தகங்களே இல்லை. அன்றியும் ஜன சமூகங்களாவது இந்தப்புரட்டைபற்றி தெரிந்து கொள்ள மார்க்கமுமில்லை.

வேதங்களை எல்லாம் சந்தேகமறக்கற்று ஒழுக்கம் நிறைந்து தபசால் மெலிந்தவர்கட்குத் தானமும் ஜனசமூகங்களின் மெலிவுக்குத் தகுந்தபடி அதனதன் அவசியத்திற்கு யேற்றதாய் ஏழைகளு

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# திருவள்ளுவரும் இல்லாளும்

சாமி சிதம்பரனார் எழுதுவது

கட்டுரை 7

இல்லறமும் திருவள்ளுவரும் என்ற கட்டுரையினால் இல்வாழ்க்கை சிறந்த தென்பதைப்பற்றிக் கூறினோம். இனி அவ்வில் வாழ்க்கையைத் திறம்பெற நடத்துவதற்குரிய கருவிகள் என்னவென்பதைப்பற்றி இக்கட்டுரையில் திருவள்ளுவர் கருத்தையொட்டிக் கூறுகின்றோம். இல்வாழ்க்கை ஆண் மகன் ஒருவனால் நடைபெறக் கூடியதொன்றன்று. இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக ஆக்கும் ஆற்றலும் அல்வாழ்க்கையாகப் போக்கும் ஆறறலும் பெண் மக்களிடமே பெரிதும் பொருந்தியுள்ளது. ஆதையால் இல்லறத்திற்குரிய பெண், கல்வியறிவுடையவளாகவும் நற்குண நற்செய்கையுடையவளாகவும் இருத்தல் இன்றியமையாததாகும் இல்லத்தலைவன் நல்ல காரியங்களைச் செய்யப்புகும்போது அதற்கு மிகுந்த துணை செய்கின்றவளாகவும் இல்லத்தலைவன் தீயொழுக்க முடையவனாயின் அவனை நல்வழியிற் திருப்பும் அறிவாற்றல் உடையவளாகவும் இருத்தல் இல்லக் கிழத்திக்குரிய செயலாம். அன்றியும் தம் கணவன் வருவாய்க்குத் தக்கவாறு சிக்கனமாகச் செலவு செய்யக்கூடிய முறையை இல்லறத்திற்குரிய பெண் பயின்றிருக்கவேண்டும். பெண்கள் அனைவரும் சிக்கனத்திற் பழக்கமுடையவராயிருப்பராயின் ஒவ்வொரு குடும்பமும் சீரும் சிறப்பும் பெற்றுவாழும். இதனை (1) இல்லறத்திற்குத் தகுக்க நற்குண நற்செய்கையுடையவளாகி தன்னைக்கொண்ட கொழுநனுடைய வருவாய்க்குத் தக்கவாறு இல்லறத்தை நடத்துபவளே மனையாளாவாள் என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

இல்வாழ்க்கையை ஒரு தேருக்கு ஒப்பிடலாம். தேரைச் செலுத்த வேண்டுமாயின் அச்சின்றித் தேரோட்ட வியலுமா? அது போலவே இல்லாளாகிய அச்சின்றி இல்வாழ்க்கையாகிய தேரைச் செலுத்தவியலாது. இல்லறத்திலிருக்கின்ற ஒருவன் நிறைந்த கல்வியுடையவனாயிருப்பினும் சிறந்த செல்வமுடையவனாயிருப்பினும் நல்ல சுற்றத்தினர்களையுடையவனாயினும் வேறு எத்தகைய பெருஞ்சிறப்புக்களை எய்தியவனாயினும் தனது இல்லாள்பால் நற்குண நற்செயல்கள் இல்லாதவரையில் அவைகளாற் சிறிதும் பயனில்லை. தனது இல்லாள் மனை வாழ்க்கைக்குத் தகுந்த குணங்களுடைய வளாயிருந்தால் தான் அவை பயன்படும் இதனை (2) மனைவாழ்க்கைக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள் ஒருவன் மனையாளிடத்தில்லையாயின் அவ்வில்வாழ்க்கைசெல்வத்தால் எவ்வளவு பெருமையுடையதாயினும் பெருமையுடையதன்று என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

ஒருவன் செல்வமில்லாதவனாயினும் வேளைக்கு வேளை வயிறு நிறைய உணவுகூட கிடைக்காத வறிஞனாயினும் கிடைத்த பொருளைக்கொண்டு மகிழ்ச்சியுடன் இல்வாழ்க்கையை நடத்துதல் கூடும். ஒருவன் குறைவில்லாத செல்வங்களைப் பெற்றிருப்பினும் அவன் இல்வாழ்க்கை எப்பொழுதும் துன்பமாகவே நடைபெறுவதையும் காணலாம். அன்றன்று வேலைசெய்து கூலி பெற்று வாழும் குடும்பங்கள் சில மகிழ்ச்சியுடன் வாழ்வதைக்காண்கிறோம். இவை மட்டோ அஃறிணையுயிர்களாகிய பறவைக்கூட்டங்கள் பல இரண்டிரண்டாகக் கூடிக் களித்து வாழ்வதைக் காண்கின்றோம். பொருளுடையோர் சிலரும் வெளியில் ஆடம்பரத்துடன் வாழ்கின்ற சிலரும் வீட்டிற் சென்றவுடன் பெட்டிப்பாம்பு போலடங்கி மனம் நொந்து வாழ்வதையுங்கண் கூடாகக் காண்கின்றோம். இவற்றிற்கெல்லாம் காரணம் கணவன் மனைவிகளின் ஒற்றுமை வேற்றுமையும் குணகுணங்களுமேயாகும் இதனை (3) ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற் செய்கைகளையுடையவளானால் அவனுக்கு இல்லாதது என்ன? இல்லாள் நற் செய்கையில்லாதவளாயிருந்தால் அவனுக்கு உள்ளதென்ன? எல்லாமிருந்தாலும் ஒன்றுமில்லை என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

ஒரு பெண் பெற்றிருக்கவேண்டிய முதன்மையான செல்வம் கற்பாகும். ஒருவன் தன் மனையாளிடத்தில் கற்பென்னும் வலிமை யிருக்கும் பேற்றைப்பெற்றிருப்பானாயின் அவனுக்கு அதைவிடப் பெருஞ் செல்வம் வேறொன்றுமில்லை. பெண் மக்களுக்கு வீரமென்பது கற்பேயாகும் கற்புடைய பெண் மக்கள் யாருக்கும் அஞ்சவேண்டுவதில்லை. இதனை (4) இல்லாளை விடப் பெறத்தக்க செல்வங்கள் வேறு ஏவையுள்ளன? அவளிடம் கற்பு என்னும் கலங்காத தன்மையிருக்குமாயின். என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

கற்புடைய பெண் மக்களின் வீரம் அளவிடற் கூடிய தொன்றன்று. அவர்களே தெய்வமாக விளங்கக்கூடியவர்கள் கற்புடைய பெண் மக்கள் இறந்த பின் அவர்களுக்கு உருவச்சிலை செய்து வைத்து வணங்கும் வழக்கம் தமிழர்களிடமுண்டு. இதனை கண்ணகியின் வரலாற்றாலறியலாம். அத்தகைய பத்தினிப் பெண்மணிகளின் கோயில்களே இப்பொழுது தமிழ் நாட்டில் வேறு வேறு பெயர்களுடன் விளங்கும் பலவகை அம்மன் கோயில்களாகும். அதிலும் மற்றைய நாட்டுப் பெண்களின் கற்பை விடத் தமிழ்நாட்டுப் பெண்களின் கற்பு மிகவும் உயர்ந்ததாகும். ஆரியர்களின் கற்பு வேறு. சீதை துரோபதி தாரை அகல்யை முதலிய வடநாட்டுப் பெண்கள் பிறரால் தீண்டப்பெற்றும் பிறரை இச்சித்தும் கற்புடையவர்களாகக் கருதப்படுகின்றனர். தமிழர் கற்பு முறைப்படி நோக்கினால் அவர்கள் கற்புடையவர்களாக மாட்டார்கள். ஆரியர்களின் ஒழுக்கப்படி அவர்கள் கற்புடையவர்களே. பிறர் நெஞ்சுபுகாத கற்புடைய வளாயிருத்தல் வேண்டும். அத்தகையவள் தன் கணவனைத் தெய்வமாக வழிபடுவாளே யன்றிப் பிறரை வழி பாட மாட்டாள். அவள் மழை பெய்யென்று சொன்னால் பெய்யும். வேண்டாமென்றால் நிற்கும். என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இதனை (5) பிற தெய்வந்தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத்தொழுது துக்கத்தினின்றும் எழுந்திருக்கும் கற்புடைமகள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்" என்னுங்குறளாலறியலாம். இங்கே தன்னைக்காத்துக்கொள்ளும் தன்மை யாவருக்கும் வேண்டும். தன்னைத்தான் காக்குந்திறமற்றவர்கள் பிறர்க்கு உதவுந்திற மற்றவர்களாவார் இஃது இயற்கை. இது போலவே இல்லறத்துக்குரிய பெண், முதலில் தன் மட்டில் காவல் செய்துகொள்ளும் திறமுடையவளாதல் வேண்டும். தன்னைக்காப்பதென்பது தனது கற்பைக்காப்பதுதான். கற்பழிந்த இல்லாள் வேறு ஒன்றையும் செய்வதற்குப் பயன் படமாட்டாள். இரண்டாவது தன் கொழுநனைக்காக்க வேண்டும். அவன் உடலுக்கோ மனத்துக்கொ சிறிதும் துன்பம் உண்டாகாதவாறு பேண வேண்டும். தன் கணவனின்றேல் ஒரு பெண் இல்வாழ்க்கையில் நலத்தை எவ்வாறு அடைய முடியும்? தான் இன்ப வாழ்க்கையடைவதெப்படி? தான் பெண் பிறவியெடுத்ததனாற் பயன் சிறிதுமில்லையன்றோ? ஆதலால், இல்லாள், தன் கணவனைத்தன்னுயிரெனக்காக்கக் கடமைப்பட்டிருக்கின்றாள், மூன்வதாகத் தன்னை யாவரும் புகழ்ந்து பேசுமாறு நடந்து கொள்ளவேண்டும். கணவன் மனத்திற்கிசைய நடப்பதால் தான் அந்தகைய புகழைப் பெற முடியும். கொழுநன் செய்கின்ற நற் செயல்களுக்குத் தானும் துணை செய்து நிற்க வேண்டும். கொழுநன் தேசவூழியம் செய்ய விரும்பினால் தானும் அதில் ஈடுபட்டு அவனுடன் சேர்ந்துழைக்கவேண்டும். கணவன் சமூக ஊழியம் செய்தால் மனைவியும அத்தொண்டில் ஈடுபட்டு அவனுக்குத்துணை செய்யவேண்டும். இத்தகைய கணவன் மனைவிகளின் இல்லற வாழ்க்கையே இல்லற வாழ்க்கையாகும். உயரிய சீரிய வாழ்க்கை யாகும். நான்காவதாக, இல்லாள் தன் கடமைகளைச் செய்வதில் சிறிதும் சோர்வில்லாமலிருத்தல் வேண்டும். தன் கடமையை யுணர்ந்து அதனை முற்ற முடிப்போரே சிறந்தோராவார். தன் கடமையைத் தவறாமற் செய்யும் வகையில் இடையூறுகள் பல நேருவது இயற்கை. அவற்றைச் சிறிதும் பொருட் படுத்தாமற் செய்து முடிக்கவேண்டும். மேற்கூறிய பண்புகளை உடைய இல்லாளே இல்லறம் நடத்துவதற்குத் தகுதியுடையவளாவாள். இதனை (6) "கற்பினின்றும் வழுவாமல் தன்னைக்காத்து, தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலிய வற்றாற் பேணி, தனக்கும் கொழுநனுக்கும் புகழுண்டாகும்படி நடந்து தனக்குரிய கடமைகளிலுஞ் சோர்வடையாமலிருப்பவளே பெண்ணாவாள்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

ஒரு பெண்ணைக் கற்பழியாமற் காக்கப் பிறரால் இயலாது. தம் மனைவிமார் கற்பைக் காக்கும் பொருட்டுச் சில ஆடவர்கள் அவர்களை வெளியிற் செல்ல விடாமலும், பிறரைக்காண முடியாலும், பிறரோடு பேசமுடியாமலும் காவல் செய்து வைப்பார்களாயினும் அக்காவலாற் சிறிதும் பயனில்லை. தீயொழுக்க முடைய பெண்ணின் நடத்தையை எந்த அடக்கு முறையாலும் அடக்கவியலாது. பெண்கள் கற்பைக் காக்கும் பொருட்டுத்தான் சில இடங்களில் 'கோஷா' முறை நடை பெறுகின்றது.

கோஷா முறையினால் பெண்களின் கற்பை ஒரு சிறிதுங் காக்க முடியாது. ஒவ்வொரு பெண்ணும் தனது அறிவாலும், மனோவலிமையாலும் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டுமே யன்றிப் பிறவற்றால் காத்துக்கொள்ள முடியாது. நமது தமிழ் நாட்டில் எப்பொழுதும் 'கோஷா' முறை இருந்ததில்லை. ஆடவர்களைப் போலவே பெண் மக்களும் எல்லாவுரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர் என்பதைப் பண்டைத் தமிழ் நூல்களால் அறியலாம். அதனால் அவர்கள் கற்புத் தன்மை

இதன் தொடர்ச்சி 17 பக்கம் பார்க்க

# ஆலயபூஜை திருவிழா.

கோவை ஸ்ரீமான் C. M. ராமச்சந்திரம் செட்டியார் எழுதுவது.

ஆலயங்களில் நாடோறும் நடப்பது நித்திய பூஜை. சில பட்சங்களில் அல்லது மாதங்களில் நடப்பது திருவிழா. வருஷத்திற்கொருமுறை விசேட திருவிழாவாகிய பிரம்மோற்சவம் நடைபெறும். இவைகள் அவ்வப்போது நடைபெறுவதற்குத் தக்க படித் தரங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வெவ்வேறு ஆலயங்களுக்கு வெவ்வேறு விதமான படித்தரங்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அன்பர்கள் கொடுக்கும் காணிக்கைகள்; முன் காலத்தில் விடப்பட்ட சொத்துக்களில் இருந்து வரக்கூடிய வருவாய்கள், மானியங்களிலிருந்து வரக்கூடிய கிஸ்துகள், சர்க்கார் கொடுக்கும் தொகைகள் முதலான பலவருவாய்களிலிருந்தும் அவைகள் நடத்தப்படுகின்றன. அதிகாரிகள் இவ்வருவாய்களைச் சரிவர வசூலித்து நித்திய நைமித்திகக் கடன்களை நடத்தவேண்டும். அக்கடன்களை நடத்துவதற்கு அவசியமான திட்டங்கள் அங்கே ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

நித்திய பூஜைக்குத் தினந்தோறும் இவ்வளவு சாமான்கள் கொடுப்பதென்றும், திருவிழாக்களுக்கு இன்ன இன்ன செலவுகள் செய்ய வேண்டும் என்றும் கணக்குகள் உண்டு. ஆனால் இக்காலத்தில் ஆடம்பரத்திற்காக அவைகளை மீறி நடத்துவதுண்டு. இக்கடன்களை நடத்துவதற்காக பல அன்பர்கள் தனித்தனியே தொகைகள் கொடுத்தும் நடத்துவதுண்டு. அவைகட்குக் கட்டளைகள் என்று பெயர். இக்கட்டளைகளை நடத்துவதற்குச் சில தர்ம கர்த்தாக்கள் நியமனம் செய்யப்பட்டும் இருக்கிறார்கள். இக்கட்டளைகள் சரிவர நடவாமல் அதற்குரியவர்கள் புசித்து விடுவதும் உண்டு. கோவில் சடங்குகளைச் செய்வதற்கு குருக்கள், வேத பாராயணங்கள் தமிழ் மறை ஓதுபவர்கள். மாலை கட்டுபவர்கள், தீபம் ஏற்றுபவர்கள் மேளக்காரர்கள், தாசிகள் முதலிய பல சிப்பந்திகள் உண்டு. இவர்கள் தங்கள் தங்கள் ஊழியத்திற்காக, மானியமோ அல்லது சம்பளமோ பெற்றிருப்பார்கள்,

சம்பளம் பெறுகிறவர்கள் காலத்திற்கேற்றபடி அதிகம் பெறாதவர்களாகி ஊதியம் போதாமல் வழிபட வந்த தொண்டர்களிடம் பொருள் பெற்று வாழ்வார்கள். மானியம் பெற்றவர்கள் மானியத்தைத் தங்கள் சொந்த சொத்துக்களாக்கியும் அவைகளைப் பராதீனம் செய்துவிட்டும் வழிபட வருபவர்களை இம்சித்தும் பணம் பிடுங்கிச் ஜீவிப்பார்கள். இவ்விதம் ஊழியம் செய்பவர்களில் அதிகமாகக் கேடு செய்பவர்கள் அர்ச்சகர்கள். இவர்கள் ஈசன் சந்நிதியில் மந்திரம் சொல்லிப், பக்தர்கள் வேண்டுகோளை நிறைவேற்ற இருப்பவர்கள். அக்காரியத்தைச் சிறிதேனும் கவனியாமல் அவர்கள் கொடுக்க இருக்கும் பணத்தின் மேலேயே கண்ணாய் இருப்பார்கள். அங்கே நடக்கும் பூஜையும் ஆளுக்கு தக்கபடியேயிருக்கும். கோயிற்பூனை தேவர்க்கஞ்சாது என்ற பழமொழிப்படி அக்கர்ப்பகிருகத்தில் அன்னோர்கள் பேசும் சில ஆபாச வார்த்தைகளும் காசுவிஷயமாக அன்னோர்கள் பிடிக்கும் சண்டைகளும் அத்தண்ணிய விடத்துக்குத் தகுதியுடைத்தன்று. அன்னோர்களில் அநேக ஆட்கள் பூஜை அபிஷேகம் பிரசாதம் இவைகளுக்குக் கொடுக்கப்பட்ட பொருள்களை எவ்வெப்போது தத்தம் மனைவிகளுக்குக் கொண்டேகலாம் என்ற எண்ணமே மேலிட்டவர்களாக இருப்பார்கள். இவ்வித எண்ணங்கட்கு மத்தியில் சாந்தம் ஏது? தெய்வ சிந்தனை ஏது? பரமானந்தம்ஏது? இவ்வைதீகர்களில் லௌகீகத்தைத் தவிர வேறு ஏது இருக்கிறது? சாதாரண மனிதர்களில் பக்தி புகுத்தக் கூடிய வாழ்க்கை கிராமங்கட்கு எவ்வாறு வரும்.

இவர்கள் செய்யும் பூஜையோ சாந்தமும் பரிசுத்தமும் அர்த்தபுஷ்டியும் இல்லாத வெறும் ஆடம்பரக்கோஷமே கொண்டிருக்கிறது. எந்த தொண்டன் மனதில் பக்தியை ஊட்டுகிறார்கள்? இவர்கள் நடத்தும் தொழிலுக்கும், களப்பலி, வெறியாடல், கார்னிவல், தமாஷா, மொஹரம், புலிவேஷம் இவைகளுக்கும் என்ன வித்தியாசம்? சைவ சமய நெறியில் கூறின எந்தநெறியை யாவது இவர்கள் பாராட்டுகின்றார்களா?

வட இந்திய ஆலயங்களில் நடக்கும் பூஜைக்கும் இவைகளில் நடக்கும் பூஜைக்கும உள்ள வித்தியாசத்தை ஆராய்வோம். வட இந்தியாவில் கோயிலில் உட்பாகம் அமைதியாகவும் பரிசுத்தமாகவும் இருக்கும். பூஜா காலங்களில் சப்தமே இருக்காது. அர்ச்சகர் சகல காரியங்களையும தரகனைப் போல் இருந்து நடத்த வேண்டியதில்லை. தொண்டர்கள் நேராக ஆலயத்துக்குட் பிரவேசித்து மூர்த்தியைக் கைதொட்டு அணைத்துத் தொழுது பின் மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு சிறிது நேரம் தாமாகவே கடவுளைத் தியானித்து விட்டு வீட்டிற்கு ஏகலாம். இந்த நிலைமை எத்தன்மை மேன்மையுடையது பாருங்கள். கோகர்ணம், பண்டரிபுரம், பம்பாயில் மும்பாதேவி, பேபுல்நாத் ஆலயங்கள், ஜகந்நாதம், காசி விசுவநாதம் இவ்வாலயங்களில் இந்தச் சீரைக் காணலாம இச்சீர் நம் கோயில்கட்கு எக்காலத்தில் வருமோ? மலையாளத்தில் உள்ள திருச்சூர் வைக்கம் முதலிய கோயில்களிலும் கிழக்குநாட்டுக் கோயில்களைக்காட்டிலும பன்மடங்கு தூய்மையும் பூஜை ஒழுங்கும் உண்டு.

ஆனால், இங்கு, நமது நாட்டு அர்ச்சகர்கள் பணத்தின்மீது ஏன் அவ்வளவு அக்கறை பாராட்டுகிறார்கள் என்றாலோ அவர்களுக்கு கிடைக்கும் ஊதியம் மிகக்குறைவு என்கிறார்கள், இக்குறை நீங்குதற்காகத் தொண்டர்களிடம கொள்ளை கொள்ளுதலும், பூஜையின்காரியத்தில் குறைத்து விடுதலும் தர்மம் போலும். ஆலய அதிகாரிகளைத் தகுந்த ஊதியம் கொடுக்கச் செய்தலே தர்மமாகும். தற்காலத்தில் இருக்கும் மானியங்கள் முதலியவைகளை நீக்கிவிட்டுத் தகுந்த சம்பளங்கள் ஏற்படுத்துவதுதான் சிறந்த காரியம். எந்த முகாந்திரத்தினாலும் அர்ச்சகர்கள் வழிபடுவோர்களிடம் காசு பெறக் கூடாது. அக்காலத்தில்தான் மனோநிம்மதி ஏற்படும்.

அர்ச்சகர்களாக இருப்பவர்கள் தகுந்த படிப்பு உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

கந்தபுராணத்தை அருளிச்செய்த கச்சியப்பசிவாசாரியாரினது படிப்பின் முதிர்ச்சி எங்கே? தற்காலத்து குருக்கள்மார்களது படிப்பின்மை எங்கே? வேதம் ஆகமம் இன்னதென்பதே அறியாதவர்கள் பூஜை செய்வதெப்படியோ! இன்னார்களுக்கு தகுந்த பாடசாலை யேற்படுத்தி அதில் தேர்ந்தவர்களாயும். நன்னடத்தையுள்ளவர்களாயும் இருப்பவர்களைத் தேர்ந்து இத்தொழிலுக்கு அமைக்கவேண்டும். இவ்விஷயத்துக்காக ஒரு கலாசாலையோ அல்லது ஒரு சர்வகலாசாலையோ ஏற்படுத்துதல் அவசியம். சில நாட்களுக்குமுன பணக்கால் ராஜா அவர்கள் திருப்பதியில் இத்தகைய சர்வகலாசாலை ஏற்படுத்தவேண்டுமென்று வெளிப்படுத்தியது மிகுந்த நன்மை புரியக்கூடியதாகும். அவ்வெண்ணத்தை முற்புவித்து ஈடேறச்செய்து வைத்தல் நம் நாட்டிற்கு நாம் செய்யக்கூடிய முக்கிய கைங்கரியங்களில் ஒன்றாகும். அக்கலாசாலைகள் மூலமாக அக்குருக்கள்மார்களுக்குத் தகுந்த வைதீக நெறியைக் கற்பித்து ஆலயங்களில் நியமித்தாலொழிய நம் ஆலயங்கள் சீர்திருத்தம் அடையவே அடையா.

நமது தேசத்திலேயே இதர மதஸ்தர்கள் எத்துணைப் படிப்புப்பெற்ற ஆசாரியர்களை யேற்படுத்திக்கொண்டு தம் ஆலயங்களை அமைதியாக நடத்தி வருகிறதை நாம் கண்ணுறக் காண்கிறதில்லையா? நாமும் என் அவைகளை நோக்கிப் பின்பற்றக்கூடாது?

திருவிழாக்காலங்களிலோ ஒரு தமாஷாவாக இருக்குமேயொழியச் சமயக்கொள்கைகள் ஒன்றும் தோன்றா. பாமர ஜனங்களை மயக்குவதற்காக விருந்துகள் பாணவேடிக்கைகள், கூத்துகள், கூத்தாட்டங்கள், வேசியர் நடனங்கள், தொகைமிகுந்த வாத்தியங்கள், இவைகளைப் பெருஞ்செலவிட்டு நடத்துவது சகஜமாகிவிட்டது. கண்ணாடிப்பந்தல்கள், பூதங்கள், விசித்திர கொட்டகைகள் ஏற்படுத்தி ஜனங்களை ஏமாற்றுகின்றார்கள்.

ஈசுவர தியானத்துக்குச் செய்யவேண்டிய பொருள்கள் இவ்வித பெரும் ஆடம்பரத்துக்கு இழக்கப்படுகின்றன. வைதீக உபந்நியாசங்கட்கும் நன்மை விளைக்கக்கூடிய சொற்பொழிவுகளுக்கும், தேவாரப் பாடல்களுக்கும் எந்த ஆலயத்தில் திருவிழாக்காலங்களில் பொருள் செலவழிக்கப் படுகின்றது?

மேலும் குருக்கள் முதலான பிரதானிகள் தங்களுக்குப் பொருள் தேவையான காலங்களில் கும்பாபிஷேகம் நடத்தவேணுமென்று பகிரங்கப்படுத்திவிட்டு ஏமாந்த ஜனங்களிடம் மிகுந்த பொருளை வாங்கிக்

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# கற்பு.

சித்திர புத்திரன் எழுதுவது.

கற்பு என்கின்ற வார்த்தையானது மனித சமூகத்தில் சரிபகுதியான எண்ணிக்கையுள்ள பெண்களை அடிமைப்படுத்தி வைப்பதற்காக மாத்திரமே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்கின்ற தத்துவத்தின் மேல் இதை எழுதுகின்றேன்.

கற்பு என்கின்ற வார்த்தையை பகுபதமாக்கி பார்ப்போமானால் கல் என்பதிலிருந்து வந்ததாகவும் அதாவது படி—படிப்பு என்பதுபோல் கல்—கற்புஎன்கின்ற இலக்கணம் சொல்லப்படுகிறது. அன்றியும் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்கின்ற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல்தவறாமை. அதாவது நாணயம், சத்தியம் என்கின்ற கருத்துக்கொண்டதாக இருக்கின்றது.

அதை பகாப்பதமாக வைத்துப்பார்த்தால் மகளிர் நிறை என்று காணப்படுகின்றது. இந்த இடத்தில் மகளிர் என்கின்ற பெண்களையே குறிக்கும் பதம் எப்படி சம்மந்தபட்டது என்பது விளங்கவில்லை. நிறை என்கின்ற சால்லுக்கு பொருள் பார்த்தால் அழிவின்மை, உறுதிப்பாடு, கற்பு என்கின்ற வார்த்தைகள் காணப்படுகின்றது. ஆகவே கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்மந்தப்பட்டது என்பதற்கு ஆதாரம் கிடைக்காவிட்டாலும் அழிவில்லாதது, உறுதி உடையது என்கின்ற பொருள் கிடைக்கின்றது.

அழிவில்லாதது என்கின்ற வார்த்தைக்கு சிரமமான கருத்துப் பார்க்கும்போது இந்த இடத்தில் சுத்தம் அதாவது கெடாதது என்பதாகத்தான் கொள்ளலாம். இந்த சுத்தம் என்கின்ற வார்த்தையும் கெடாதது என்கின்ற கருத்தில்தான் ஆங்கிலத்திலும் காணப்படுகிறபடி அதாவது சேஸ்டிடி (Chastity) என்கின்ற வார்த்தைப்படி பார்த்தால் வர்ஜினிட்டி (Verginity) என்ற பொருள் என்பதும் அதை அந்த உணர்ச்சிப்படியும் பார்த்தால் இது ஆணுக்கென்றோ பெண்ணுக்கு என்றோ சொல்லாமல் பொதுவாக மனித சமூகத்திற்கே எவ்வித ஆண் பெண் புணர்ச்சி சம்மந்தமே சிறிதும் இல்லாத தன்மைக்கே உபயோகப்படுத்தி இருக்கின்றது. ஆகவே கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்மந்தப்பட்டதல்ல என்பதும் அதுவும் ஆணோ பெண்ணோ ஒரு தடவை கலந்த பிறகு எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் கற்பு அல்ல என்கின்ற கருத்து கொள்ளக்கூடியதாகின்றது. ஆனால் ஆரிய பாஷையில் பார்க்கும்போது மாத்திரம் கற்பு என்கின்ற பதத்திற்கு பதிவிரதை என்கின்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில் தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனதபிப்பிராயம். அதாவது பதியை கடவுளாகக் கொண்டவள், பதிக்கு அடிமையாய் இருப்பதையே விரதமாகக்கொண்டவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன் பதி என்கின்ற வார்த்தைக்கு அதிகாரி எஜமான், தலைவன், என்கின்ற பொருள்கள் இருப்பதால் அடிமைத்தன்மையை இவ்வார்த்தைகள் பலப்படுத்துகின்றன. ஆனால் தலைவி என்றபதத்திற்கும் நாயகிஎன்றபதத்திற்கும் மனைவி என்ற பொருள் குறிக்கப்பட்டிருந்தாலும் அது காதல் கொண்ட நிலையில் மாத்திரம் ஆணையும் பெண்ணையும் குறிக்கின்றதே ஒழிய வாழ்க்கையில் கட்டுப்பட்ட பெண்களுக்கு தலைவி என்கின்ற வார்த்தை அதன் உண்மைக் கருத்துடன் வழங்கப்பட்டுவதில்லை. நாயகன் நாயகி என்கின்ற சமத்துவமுள்ள பதங்களும் கதைகளிலும் புராணங்களிலும் காதல்களை உணர்த்தும் நிலைகளுக்கே மிகுதியும் வழங்கப்படுகின்றது. ஆகவே காமத்தையும் காதலையும் குறிக்குங்காலங்களில் சமத்துவப் பொருள் கொண்ட நாயகர் நாயகி, தலைவர் தலைவி என்கின்ற வார்த்தைகளை உபயோகித்து விட்டு, கற்பு என்கின்ற நிலைக்கு வரும்போது அதை பெண்களுக்கு மாத்திரம் சம்மந்தப்படுத்தி, பதி ஆகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ள வேண்டுமென்கின்ற கருத்து கொண்டிருக்கின்றது. இந்த இடத்தில் நமது திருவள்ளுவரின் நிலைமையும் எனக்கு சற்று மயக்கத்தை தருகின்றது.

அதாவது, குறளில் வாழ்கைத்துணை நலத்தைப்பற்றி சொல்ல வந்த 6-ம் அத்தியாயத்திலும் பெண்வழிச் சேரல் என்பதைப் பற்றி சொல்லவந்த 91-வது அத்தியாயத்திலும் மற்றும் சில தனி இடங்களிலும் பெண்கள் விஷயத்தில் மிக்க அடிமைத் தன்மையையும் தாழ்ந்த தன்மையையும் புகுத்தப்பட்டிருப்பதாகவே எண்ணக்கிடக்கின்றது. தெய்வத்தை தொழாமல் தன் கொழுனனாகிய தன் தலைவனை தொழுகின்றவள் மழையைப் பெய்யென்றால் பெய்யும் என்றும், தன்னைக்கொண்டவன் என்றும் இம்மாதிரியான பல தாழ்த்தத் தகுந்த கருத்துக்கொண்ட வாசகங்கள் காணப்படுகின்றன. இது விஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ளுவோர் மேல் கண்ட இரண்டு அத்தியாயங்களையும் 20 குறளையும் உரைகளை கவனியாமல் மூலத்தை மாத்திரம் கவனிக்கும்படி வேண்டுகிறேன். அப்படிப் பார்த்து பிறகு இந்த இரண்டு அதிகாரங்கள் அதாவது வாழ்க்கைத் துணை நல அதிகாரமும் பெண்வழிச் சேரல் அதிகாரமும் குற்ற மற்றது என்பதாக யார் வந்து எவ்வளவு தூரம் வாதிப்பதானாலும் கடைசியாக திருவள்ளுவர் ஒரு ஆணாயில்லாமல் பெண்ணாயிருந்து இக்குறள் எழுதியிருப்பாரானால் இம்மாதிரி கருத்துகளை காட்டியிருப்பாரா என்பதையாவது கவனிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். அதுபோலவே பெண்களைப்பற்றிய தர்மசாஸ்திரங்கள் என்பதும் பெண்களைப்பற்றிய நீதி நூல்கள் என்பதும், பெண்களால் எழுதப்பட்டிருக்குமானாலும் அல்லது கற்பு என்கிறை வார்த்தைக்கு பெண்கள் வியாக்கியானம் எழுத ஏற்பட்டிருந்தாலும் கற்பு என்பதற்கு பதிவிரதம் என்கின்ற கருத்தை எழுதியிருப்பார்களா என்பதையும் யோசித்துப்பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கற்பு என்புதற்கு பதிவிரதம் என்று எழுதிவிட்டதின் பலனும் பெணகளை விட ஆண்கள் உடல்வலி கொண்டவர்களானதினாலும் பெண்கள் அடிமையாவதற்கும் புருஷர்கள் மூர்க்கர்களாகி கற்பு என்பது தங்களுக்கு இல்லையென்று நினைபபதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை,

தவிர புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷைகளில் தனி வார்த்தைகளே சாணுமல் மறைபட்டுக் கிடப்பதற்கும் காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை.

இந்த விஷயத்தில் உலகத்தில் இன்ன நாடோ, இன்ன மதமோ, இன்ன சமூகமோ யோக்கியமாய் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்லமுடியாது. உதாரணமாக ஐரோப்பியா தேசத்திலும் பெண்களுக்கு பலவித சுதந்திரங்கள் இருப்பது போல் கணப்பட்டாலும் புருஷன் பெண்சாதி என்பதற்காக ஏற்பட்ட பதங்களிலேயே உயர்வு தாழ்வு கருத்துக்கள் நுழைக்கப்பட்டிருப்பதுடன் சட்டங்களும் புருஷனுக்கு அடங்கி நடக்க வேண்டியதாகவே ஏற்பட்டிருக்கிறது.

துருக்கி நாட்டிலும்மகமதியசமூகத்திலும் படுதா என்றும், கோஷா என்றும் அதாவது பெண்கள் அறைக்குள் இருக்வேண்டியவர்கள் என்றும் முகத்தை மூடிக்கொண்டு வெளியில் போகவேண்டியவர்கள் என்றும் ஏற்படுத்தப்பட்ட கொள்கையும், புருஷன் பலபெண்களை மணக்கலாம், பெண்கள் ஏக காலத்தில் ஒரு புருஷனுக்குமேல் கட்டிக்கொண்டு வாழக்கூடாதுஎன்ற கொள்கையும் நம்நாட்டில்ஒருதடவைபுருஷன், பெண்சாதி, என்கின்ற சொந்தம் ஏற்பட்டுவிட்டால் அந்தப் பெண்ணுக்கு சாகும் வரைக்கு வேறு எவ்வித சுதந்திரமும் இல்லை என்றும் புருஷன் பல பெண்களை கட்டிக்கொண்டு அப்பெண்ணின் முன்பாகவே ஒவ்வொரு பெண்ணுடனும் கூடி வாழலாம் என்றும், புருடன் தான் கொண்ட பெண்ணை தன்னுடன் இருத்தி வாழ விடாமலும் கூட புருடனை சாப்பாட்டிற்கு மாத்திரம் கேட்கலாமேயொழிய இன்பத்திற்கோ, காதலுக்கோ கட்டுப்படுத்த உரிமை இல்லை என்றும் கட்டுப் பாடு வழஙகப்பட்டு வருகின்றது.

இன்னிலை சட்டத்தாலும், மதத்தாலும், மாத்திரம் ஏற்பட்ட தென்று சொல்வதற்கில்லாமல் ஸ்திரீ சமூகமும் ஒப்புக்கொண்டு இந்நிலைக்கு உதவி புரிந்து வருவதினாலும் இது உறம் பெற்றுவருன்றதென்றே சொல்லவேண்டும். அநேக வருட பழக்க வழக்கங்களால் தாழ்ந்த ஜாதியார் எனப்படுவோர் எப்படி தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதை ஒப்புக்கொண்டு தாமாகவே கீழ்ப்படியவும், ஒடுங்கவும், விலகவும் முந்துகின்றார்களோ அதுபோலவே பெண்மக்களும் தாங்கள் ஆண்மக்களின் சொத்துக்களென்றும், ஆண்களுக்குக் கட்

இதின் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க).

# மூட நம்பிக்கை

## வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம்.

சித்திர புத்திரன் எழுதுவது.

நகை வியாபாரி— அய்யா தாங்கள் என்னிடம் காலையில் காசுமாலை வாங்கிவந்தீர்களே அது தங்களுக்குத் தேவையா இல்லையா என்பதை தெரிவித்துவிட்டால் வேறு ஒருவர் வேண்டும் என்று சொல்லி மத்தியானமிருந்து கடையில் காத்துக்கொண்டிருக்கிறார். அவருக்காவது கொடுத்துவிடலாம் என்று வந்திருக்கின்றேன். எனக்குப் பணத்துக்கு மிகவும் அவசரமாயிருப்பதால் தயவுசெய்து உடனே தெரிவித்து விடுங்கள்.

வைதீகர்— செட்டியாரே, அந்தநகை தேவையில்லை. வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வரும்போது பூனை குறுக்கே போச்சுது, அப்பொழுதே வேண்டியதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். வீட்டில் பெண்டுகள் பார்த்து மிகவும் ஆசைப்பட்டு மாலையிலுள்ள காசை எண்ணிப்பார்த்தார்கள். அதில 68 காசு இருந்தது. எட்டு எண்ணிக்கை கொண்டது எதுவும் எங்கள் குடும்பத்திற்கு ஆயிவருவதில்லை. அதனால் அவர்களுடஉடனே கீழே போட்டுவிட்டார்கள். ஆனதினால் அது எங்களுக்கு வேண்டியதில்லை.

நகை வியாபாரி— அப்படியானால் தயவு செய்து கொடுத்துவிடுங்கள். வேறு ஒருவர் காத்துக்கொண்டிருக்கின்றார்.

வைதீகர்— ஆ ஹா, கொடுத்துவிடுவதில் ஆக்ஷேபனையில்லை. காலமே நேரத்தில் வாருங்கள், கொடுத்துவிடுகின்றேன்.

நகை வியாபாரி— அவர் இன்று ராத்திரிக்கு ஊருக்குப்போகின்றவர் ஆனதால் தயவுசெய்து இப்பொழுதே கொடுத்துவிடுங்கள்.

வைதீகர்—செட்டியாரே, தாங்கள் என்ன நாஸ்திகராய் இருக்கின்றீர்கள், வெள்ளிக்கிழமை, அதுவும விளக்கு வைத்த நேரம், இந்த சமயத்தில் நிறைந்த வீட்டிலிருந்து பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? அது லக்ஷிமி அல்லவா?

நகை வியாபாரி— என்ன அய்யா! வியாபாரத்திற்காக பெண்டுகளுக்கு காட்டிவிட்டு கொண்டுவருகிறேன் என்று எடுத்துக்கொண்டுவந்த நகையைவேறு ஒருவர் அவசரமாகக்கேட்கின்றார்களென்று வந்து கேட்டால் வெள்ளிக்கிழமை, விளக்குவைத்த நேரம என்கின்றீர்களே- இது என்ன ஒழுங்கு! ஊரார் நகைக்கு நாள் என்ன, நேரம என்ன என்பது எனக்கு விளங்கவில்லையே.

வைதீகர்—(தனக்குள்ளாகவே 'இந்த இழவுநகையை நாம் ஏன் இந்த மனிதனிடம வாங்கிவந்தோம' என்றுநினைத்துக்கொண்டு) என் புத்தியை விளக்குமாற்றால் புடைக்க வேண்டும், உம்ம கடைக்கு வந்ததே பிசகு, தவிரவும் உம்மிடம் நகையை எடுக்கும்போதே மணி பத்தரை இருக்கும், நல்ல ராகு காலத்தில் எடுத்துவந்தேனே, அது எப்படியானாலும் கலகமாய்த்தான் தீரும், எனக்கு புத்திவந்தது. இனி இந்தமாதிரி செய்ய மாட்டேன். தயவுசெய்து நாளைக்கு வாருங்கள்.

நகை வியாபாரி— இது என்ன அய்யா தமாஷ் செய்கின்றீர்களா என்ன? உங்கள் நகையை யாராவது கேட்டால் நாள் கோள் எல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள். ஊரார் நகைக்கு இதையெல்லாம் பார்க்கச் சொல்லி உங்களுக்கு எவன் புத்தி சொல்லிக் கொடுத்தான். அவனைக்கூட்டிக்கொண்டு வாருங்கள். அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கின்றேன். மரியாதையாய் நகையை கொடுங்கள் நேரமாகுது.

வைதீகன்— நீங்கள் 'குடி அரசு' பத்திரிக்கை கக்ஷியைச் சேர்ந்தவர்களா என்ன? நாளையும் கோளையும் சாஸ்திரத்தையும் கேலிசெய்கின்றீர்களே, அந்தக் கூட்டத்திற்குத்தான் நல்லது இல்லை கெட்டது இல்லை, மேல் இல்லை, கீழ் இல்லை, கோவில் இல்லை, குளம் இல்லை, சாஸ்திரம் இல்லை, புராணம் இல்லை: பறையனும் பாப்பானும் ஒண்ணு என்று ஆணவம்பிடித்து நாஸ்திகம் பேசிக்கொண்டு திரிகிறார்கள். நீங்களும் அதுபோல் பேசுகின்றீர்களே.

நகைக்காரர்— நீரே ரொம்பவும் ஆஸ்திகராயிருந்து கொள்ளும், அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. மரியாதையாய் நகையை கொடுத்துவிடும், பவுன் விலை இறங்கப் போகின்றது. இன்றைக்கு விற்காவிட்டால் எனக்கு நஷ்டம் வந்துவிடும. வேறு ஒரு அசாமியும் மிகவும் ஆசையாய் காத்திருக்கின்றார். இனி தாமதம செய்யாதீர் இருட்டு ஆகப்போகிறது, சீக்கிரம் எடுத்துக்கொண்டுவாரும்.

வைதீகர்—(வீட்டிற்குள் போய் சம்சாரத்துடன் யோசிக்கின்றார். ஏனெனில், செட்டியார் நகை கேட்கின்றார்.

அம்மா:—இன்றைக்கு வெள்ளிக்கிழமை, விளக்குவைத்த நேரம், லக்ஷிமியை வீட்டை விட்டு வெளியில் கொடுக்கலாமா?

புருஷன்— எல்லாம நான் சொல்லிப்பார்த்தாய்விட்டது. செட்டியார் ஒரேபிடியாய் இப்போதே கொடுத்தாகவேண்டும என்று கட்டாயப்படுத்திக்கொண்டு வெளியில் காத்துக்கொண்டிருக்கிறார்.

அம்மா—(பலமாய் சத்தம் போட்டுக்கொண்டு வெளியில் வருகிறபோது பேசிக்கொண்டுவருவதாவது) செட்டியாருக்கு புத்தியில்லை, அவர் என்ன செட்டியா மட்டியா? வீடுவாசல் வைத்து பிழைத்த மனிதனா, நாடோடித்தடம போக்கியா? நிறைந்த வீட்டில் விளக்கு வைத்த நேரத்தில கலகம் பண்ணவந்திருக்கிறான், நான போய் கேட்கிறேன். என்ன செட்டியாரே உமக்கு புத்தியில்லை, இப்பொழுதுதான் ஏதோ கொஞ்சம் ஒ ஹோ என்று எங்கள் குடும்பம தலை எடுக்கின்றது. அதுக்குள் நீர் எமனாய் வந்துவிட்டீர். நாளைக்கு காலமே வாருமே. அதற்குள் என்ன நீர் கொள்ளையில் போய விடுவீரா, அல்லது வேறு ஒரு மனிதன் நகை வாங்கவந்தவன் என்கிறீரே. அவன் கொள்ளையில் போய்விடுவானா? உமக்குத்தான் புத்தியில்லாவிட்டாலும் அவனுக்காவது புத்தியிருக்க வேண்டாமா? வெள்ளிக்கிழமை நகையைப் போய் கேட்கச்சொல்லலாமா என்கிற அறிவில்லாமல் உம்மை இங்கே அனுப்பி ரகளை பண்ணச்சொல்லி இருக்கிறானே, அத்தனை அவசரம் என்ன?

இந்தசமயத்தில் மகன் வந்து விட்டான்.

மகன்—என்ன அம்மா கூச்சல் போடுகிறாய்? இவர் யார்?

தாயார்—இவரா? இவர் ஒரு நகை வியாபாரியாம். இவர் தலையில் நெருப்பைக்கொட்ட! வெள்ளிக்கிழமை விளக்குவைத்த நேரத்தில் காசிமாலையைக் கொண்டு வந்து கொடுக்கவேண்டுமாம். ரகளைக்கி நிற்கிறார்.

மகன்— அதெல்லாம் இருக்கட்டும் ஜாஸ்திபேசாதே? நமக்கு காசிமாலையேது? நம் வீட்டில் காசிமாலை இல்லையே- அப்பாதான் வாங்கவேண்டும் என்று நேத்து மத்தியானம் பேசிக்கொண்டிருந்தார். அதற்குள்ளாகவா வந்து விட்டது?

தயார்—உங்கப்பா யார் முகத்தில் முழித்தாரோ! காலையில் கடைக்குப்போனார், இந்த செட்டியாரிடம் மாலை ஒன்று இருந்தது, அதை எனக்குக்காட்டுவதற்காக வாங்கிவந்தார். நேற்று நினைக்கும்போதே ராகு காலம், இன்று செட்டியார் கடையில் நகைவாங்கும்போதும் ராகு காலம், வழியில் வரும்போது பூனை குறுக்கே போச்சுதாம்; அப்பொழுதே உங்கப்பா வேண்டாமென்று தலையைசுத்தியெறிந்துவிட்டு வரவேண்டாமா? அப்படிச் செய்யாமல் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். அது கொஞ்சம் நன்றாய் இருந்தது. நானும் ஆசைப்பட்டு வாங்கலாம் என்று முடிவுகட்டி எண்ணிப்பார்த்தேன். காசு அறுபத்தெட்டாயிருந்தது, உடனே தலையைச்சுற்றி எறிந்து விட்டேன். உங்கப்பா பெட்டியில்வைத்துவிட்டார். இப்ப வந்து செட்டியார் அவசரப்படுறார்; யாரோ வேறே கிராக்கி காத்துக்கொண்டிருக்கின்றதாம்; வெள்ளிக்கிழமை, விளக்குவைத்தநேரம், முதலாவது பெட்டியைத் திறக்கலாமா? நீயே சொல்லு பார்ப்போம்.

மகன்—ஐயய்யோ! இதென்ன பெரிய அழுக்கு மூட்டையாயிருக்குது. குருட்டு நம்பிக்கைப்பிடுங்கலாயிருக்கின்றது; வெள்ளியாவது, சனியாவது, ராகாவது, கேதுவாவது! ஊரார் வீட்டு நகையைவாங்கிக்கொண்டு வந்து பெட்டியில் வைத்து பூட்டிக்கொண்டு வெள்ளியுஞ் சனியும் பேசுவது வெகு ஒழுங்காய் இருக்கின்றது. பேசாமல் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்து விடு; இல்லாவிட்டால் பெட்டியை உடைத்து விடுவேன தெரியுமா?

அதற்குள் அப்பா வந்துவிட்டார்.

அப்பா—என்னடா பயலே. பலே அதிகப்பிரசங்கியாய்ப் போய் விட்டே. நான் அப்போதே உன்னை 'குடி அரசு' பத்திரிகையைப் படிக்கவேண்டாம். கெட்டுப் போவாய் என்று சொன்னேனா இல்லையா? அதுபோலவே படித்து கெட்டுக் குட்டிச்சுவராய் போய்விட்டாயல்லவா? கர்மம்! கர்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் தீர்மானம்.

## பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரப் புரட்டு.

"திராவிடன்" 28-12-27 உ தலையங்கம்

### III.

காங்கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டிருக்கும் மற்றொரு தீர்மானம் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானமாகும். இந்தப் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்கார மென்கின்ற பூச்சாண்டியானது, சுமார் 18 வருஷத்திற்கு முன்பு அதாவது வங்காளப் பிரிவினையின் போது வெள்ளைக்காரரை மிரட்டுவதற்கென்று கண்டுபிடிக்கப்பட்ட தந்திரமாகும். ஆனால் அது அன்று முதல் இன்றுவரை வெறும் புரட்டாகவே நின்றுவிட்டது அதாவது வெள்ளைக்காரரை மிரட்டுவதற்குக்கூட உபயோகப்படாமல் பாமர ஜனங்களை ஏமாற்றவே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றதேயல்லாமல், காரியத்தில் கடுகளவுகூட அமுலில் கொண்டுவந்ததாக யாராலும் சொல்ல முடியாது. பஞ்சாப் அட்டூழிய ஒத்துழையாமையின் போதும் இந்தப் பகிஷ்காரப் பூச்சாண்டி வேஷம் வெறிபிடித்து ஆவேசம் கொண்டு திரிந்த காலத்திலும் பிரிட்டிஷ் சாமான்பகிஷ்காரம் என்று தொப்பிகளும் குடைகளும் பட்டு அல்பாக்கா கம்பளி சட்டைகளும் சரிகை வேஷ்டிகளும் சேலைகளும் பழையகிலை போட்டுப்பார்த்தாலும் சுமார் இருபது முப்பது லட்ச ரூபாய் பெறும்படியான அளவுள்ளவைகளை அந்தந்த ஊர்களில் குன்றுகள் போலவும், மலைகள் போலவும் சேகரம் செய்து நெருப்பு வைத்துக்கொளுத்தினதும் ஆவேசக்காரர் அந்நெருப்பில் தங்கள் மீது அணிந்துள்ளதையும் கழற்றி வீசி எறிந்ததும் யாவரும் அறிந்ததுதான். ஆனால் அதன் பயன் என்னவாயிற்று என்று கேட்போமானால் பயப்படுவார்கள் என்று நினைக்கப்பட்ட வெள்ளைக்காரர்கள், இதைப்பார்த்துப் பயப்படுவதற்குப் பதிலாக பரிகாசம் பண்ணிக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள். ஏன் சிரித்தார்கள் என்றால், எரிக்கப்பட்ட இவ்வளவு வஸ்துக்களுக்கும் பதிலாக அவர்களுடைய புது வஸ்துக்கள் விற்கப்பட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்கின்ற ஆனந்தத்தினாலேயே அல்லாமல் வேறல்ல. அன்றியும் அப்படி நெருப்பில்போட்டு எரிக்கக் கொடுத்தவர்களும் நூற்றுக்கு 90 பேருக்கு மேலாகவே மெள்ள மெள்ள புதிய வஸ்துக்களையே ஒன்றுக்கு இரண்டாக அதாவது ஐரோப்பிய யுத்தத்தின் பலனாய் ஏற்பட்ட இரட்டை விலை கொடுத்து வாங்கி அனுபவித்து வருகிறார்கள். இதில் இரகசியம் ஒன்றும் கிடையாது. பொது வாழ்வில் கலந்திருந்த ஒவ்வொரு இந்து முஸ்லீம் நண்பர்களும் தங்கள் தங்கள் நிலையைக் கவனித்துப் பார்த்தால் இதற்குச் சாட்சி கிடைத்து விடும். தவிர, பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று சொல்லுகின்ற புரட்டை எதெதற்கு உபயோகிக்கின்றார்கள் என்று பார்த்தால், படித்த கூட்டத்தார் தங்களுக்கும் தங்கள் பிள்ளைகுட்டிகளுக்கும் உத்தியோகங்களும் பதவிகளும் கிடைப்பதில் ஏதாவது நிதானம் ஏற்பட்ட காலத்திலோ, அல்லது அவ்வுத்தியோகங்கள் தங்கள் கூட்டத்திற்கே ஏகபோகமாய்க்கிடைக்காமல் எல்லோருக்கும் பங்குபோய்விடுமோ என்கிற சந்தேகம் ஏற்பட்ட காலத்திலோ, அல்லது ஓட்டுகிடைப்பதில் சந்தேகம் வந்தாலோ அந்தமாதிரி சமயங்களுக்கு இந்தப் பூச்சாண்டியைக் காட்டுகின்றார்களே அல்லாமல், வேறு சமயங்களிலே வேறு முக்கியமான காரியத்திற்காகவோ இதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படுவதே இல்லை. இந்தியா யோக்கியமானமக்களையுடைய தேசமாய் இருந்து இந்நாட்டு மக்களுக்கு தேசத்தினிடத்திலும் ஏழை மக்களிடத்திலும் கவலையும் சுயமரியாதையும் இருக்குமானால் முக்கியமாய்ப் பஹிஷ்கரிக்க வேண்டிய காரியம் எது என்று யோசிப்போமேயானால், முதலாவது நம்மை கொடுமைப் படுத்துபவர்கள் என்றோ நமது சுயமரியாதைக்கு விரோதியாக இருப்பவர்கள் என்றோ கருதப்படுகின்ற ஒரு அரசாங்கத்திற்கு எந்த வழியிலும் உதவி செய்யாமலும் அதனிடம் நேசபாவம் கொள்ளாமலும் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டியதுதான் உண்மையான இந்திய மக்கள் செய்யவேண்டிய கடமையாகும் என்றே சொல்லுவோம். இவ்விஷயத்தில் பிறவியிலேயே உயர்ந்த ஜாதி என்கின்ற கூட்டத்திற்காவது கடுகளவுகூட கவலையில்லாமல் வெள்ளைக்காரச் சாமான்களைப் பகிஷ்கரிக்காவிட்டாலும், வெள்ளைக்காரரை அதுவும வேறு எங்கும் பகிஷ்கரிக்க முடியாவிட்டாலும் தங்கள் வீட்டுக்குள்ளாவது வரவழையாமல் பகிஷ்கரிக்க முடிகின்றதா? அதுவும் கூட பலருக்கு முடியாத காரியமாய் இருந்து வருகின்றது. இதையெல்லாம் அறிந்த வெள்ளைக்காரர் இந்த வெறும்வாய் வார்த்தை பகிஷ்காரத் தீர்மானத்திற்குப் பயப்படுவார்களா என்று கேட்கின்றோம். தவிர தேசபக்தர்கள் என்போர்களால் தேசியத்திற்காக நடத்தப்படும் எந்த தேசிய பத்திரிகைகளோ பத்திராதிபர்களோ பிரிட்டிஷ் சாமான்களை விளம்பரப்படுத்தி தாகு வாங்கிப் பிழைக்கும் பிழைப்பிலிருந்தாவது விலகியிருக்கின்றார்களா என்று கேட்கின்றோம். கொட்டகையிலும் கூட்டத்திலும் பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிப்பதாகத் தீர்மானம் போட்டுவிட்டு சற்றும் மானம் ஈனம் சுயமரியாதை என்பதில்லாமல் அடுத்த நாளே வெள்ளைக்காரன் வீட்டிற்குப்போய் அவன் காலடியில்விழுந்து 'அய்யா உங்கள் சாமான்களை விளம்பரப்படுத்த எனக்கு தாகு கொடுங்கள்' என்று கெஞ்சுகிற யோக்கியர்களால் நிறைவேற்றப்படும தீர்மானம உண்மையில் பகிஷ்கார கருத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானமென்று எந்த மனிதனாவது நம்புவானா என்று கேட்கின்றோம். இந்த நாட்டில் இந்த மாதிரியான யோக்கியப் பொறுப்பற்ற கூட்டத்தாரின்வயிற்றுப் பிழைப்புக்கான அரசியலின பலனாய் ஏழை மக்களுக்கு அடியோடு தொழில் அற்று, வாரம் ஒன்றுக்கு நாகப்பட்டணம் ரேவுதுறையிலிருந்தும் தூத்துக்குடி ரேவுதுறையிலிருந்தும் மண்டபம் ரேவுதுறையிலிருந்தும் காகிநாடா ரேவுதுறையிலிருந்தும் மற்றும் பல இடங்களிலிருந்தும் 20000 பேர்கள் 30000 பேர்கள் வயிற்றுக்குழந்தையுடனும் தொண்ணூறுவயது கிழவர்வரையில் பெண்டு பிள்ளைகளுடனும் குழந்தை குட்டிகளுமாக, இந்நாட்டில் பிழைப்பில்லாத காரணத்தால் கண்டி கொழும்பு தென்னாப்பிரிக்கா பிஜி சிங்கப்பூர் பினாங்கு மோரீசு என்பதான அனேக ஊர்களுக்கு காளிக்கும் மாரிக்கும் கருப்பனுக்கும் பலி கொடுப்பதுபோல் கூலிகளாகக்கப்பல் கப்பலாய்ப் புறப்பட்டுப் போகின்றார்களே அவர்கள் விஷயத்தில் இவர்கள் பகிஷ்காரம் எங்கே போயிற்று என்று கேட்கின்றோம்- தவிர ஒவ்வொரு ரயில்வேயிலும் ஒவ்வொரு இயந்திரத் தொழிற்சாலைகளிலும் நமது தொழிலாள சகோதரர்களை நாயினும் கடையாக மதித்து கொடுமைப் படுத்துவதுடன் 1000 2000 3000 தொழிலாள சகோதரர்களைத் திடீரென்று "வேலையில்லை வெளியில்போ" என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளி வெளியாக்குகின்றார்களே! இத்தொழிலாளிகள் குடும்பங்கள் லட்சக்கணக்காய் பட்டினி கிடக்கின்றதே! என்கின்ற விஷயங்களில் இந்த பகிஷ்காரம் எங்கே போயிற்று என்று கேட்கின்றோம். ஸ்ரீமான் காந்தி அவர்கள் உடலில் பலமில்லாமலும் வெளியில் போய் சம்பாதிக்க யோக்கியதை இல்லாமலும் வீட்டிலே கிடந்து நாள் ஒன்றுக்கு அரை அணாகூட சம்பாதிக்க வகை யில்லாமலும் கஷ்டப்படும், நொண்டி, முடம், கூன், குருடு கிழடு பருவமடைந்து வெளியில்வரமுடியாத பெண்கள் வெளியில் கூலிசெய்யப்போனால் தங்கள் வாழ்ந்தவாழ்வுக்கு பழிவருமே என்று அஞ்சி பட்டினி கிடக்கும் சகோதரிகள் ஆகிய இவ்வளவு பேருக்கும் தினம் ஒருவேளைக்காவது கஞ்சிகிடைக்கவேண்டுமென்று கண்டுபிடித்த காமதேனுஎன்னும் இராட்டின விஷயத்தில்–இவர்களுடைய பிரிட்டிஷ சாமான் பஹிஷ்காரத்தை விட மேலான தத்துவம் கொண்டதான கதர் வேலையில் இந்த எண்ணம் எங்கே போயிற்று. என்று கேட்கின்றோம். அன்றியும் பிரிட்டிஷ் சாமான்களை பஹிஷ்காரம் செய்யவேண்டும் செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்வதற்காக எந்த காங்கிரசைக் கூட்டினார்களோ அந்தக் காங்கிரசில் வைத்த கண்காக்ஷி சாலையிலாவது பிரிட்டிஷ் சாமான்களை பஹிஷ்காரம் செய்யவேண்டும் என்கின்ற எண்ணமில்லாமல் பிரிட்டிஷ சாமான்களைக் கொண்டு வந்து வைத்து நிரப்பி காட்டிக் கொடுத்து கூலிவாங்கின இவர்கள் உண்மையில் பஹிஷ்காரம் செய்யவேண்டும் என்கின்ற எண்ணமுடையவர்கள் என்று எந்த மூடனாவது நம்பமுடியுமா என்று கேட்கின்றோம் அன்றியும் எந்த அரசாங்கத்தின் கொடுமைக்காகப் பிரிட்டிஷ் சாமான் பஹிஷ்காரம் செய்வதாகச் சொல்லுகின்றார்களோ அந்த அரசாங்கத்தாரிடமே அவர்கள் சாமான்களை விளம்பரம்செய்யதாகர்களாக இருக்க ஒப்பந்தம் பேசி காங்கிரஸ் செலவுக்கென்று 20,000 ரூபா கூலி வாங்கியவர்களும்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# காங்கிரசும் ராயல் கமிஷன் பஹிஷ்காரப்புரட்டும்.

ராயல் கமிஷனை பஹிஷ்கரிக்கும் விஷயமாய் அரசியல் வாதிகள் இடும் கூச்சல்கள் எல்லாம் புரட்டு என்றும் அது பெரிதும் வகுப்பு உரிமைக்கு விரோதமாய் போடும் கூச்சல்கள் என்றும் ஆதிமுதல்கொண்டே எழுதிவந்திருக்கின்றோம்.

உதாரணமாக, வகுப்பு உரிமை வேண்டுமென்று கேட்கப்படும் எந்தக்கூட்டத்தாராலாவது பஹிஷ்காரம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றதா என்பதைப் பார்த்தால் தெரியவரும். அத்துடன் கமிஷனை பஹிஷ்கரிக்கும் ஒவ்வொரு கூட்டமும் வகுப்புரிமை கூடாதென்பதையும் வற்புறுத்திக்கொண்டே வருகின்றது. எனவே கமிஷனை அடியோடு பஹிஷ்கரிக்கவேண்டும் என்றுசொல்லும் தத்துவம் கமிஷனில் எல்லா வகுப்புகளுக்கும் சம உரிமை கிடைக்கும்படியான நிலைமை ஏதாவது ஏற்பட்டுவிடுமோ என்கின்ற பயத்தாலேயே ஒழிய கமிஷனால் இந்திய அரசியல் சுதந்திரத்திற்கு ஏதாவது கெடுதி வந்துவிடுமோ என்கின்ற காரணத்தாலல்லவென்றே சொல்லுவோம்.

மிதவாதிகள் கூட பஹிஷ்காரத்திற்கு ஆதரவளிக்கின்றார்கள் என்பது சிலருக்கு அதிசயமாகத்தோன்றலாம். மிதவாதிகள் பஹிஷ்கரிக்கும் காரணம் தியாகபுத்தியுடனோ அல்லது அரசாங்கத்துடன் விரோதித்துக்கொள்ளத்தக்க வீரத்துடனோ அல்லவென்பதை உறுதியாய்ச் சொல்லுவோம்.

முக்கியமாக மிதவாதிகள் என்பவர்கள் பெரிதும் யார் என்று பார்த்தால் இந்த உண்மை விளங்கும். அதாவது,

ஸ்ரீமான்கள் சிவசாமி அய்யர், சிந்தாமணி, பந்துலு, சாப்ரு அய்யர், மாளவியா அய்யர், சீனிவாச சாஸ்திரி, ரங்காச்சாரி, நரசிம்ம சர்மா முதலிய அய்யர், சாஸ்திரி, சர்மா பந்துலு, ஆச்சாரி ஆகிய பார்ப்பனர்களே அல்லாமல வேறல்ல. இந்தக் கூட்டங்களில் ஒவ்வொருவரும் சர்க்காருடன் ஒத்துழைத்தவரும் சர்க்காரில் மாதம் ஒன்றுக்கு 5000, 7000 சம்பளம் வாங்கினவரும் சர்க்காருக்கு விரோதமாக ஜனங்கள் கிளம்பிய காலத்திலெல்லாம் சர்க்காருக்கு ஆதரவளித்து கூலிபெற்றவருமே யல்லாமல் தேசத்திற்காக ஒரு காலொடிந்த ஊசியாவது நஷ்டப்பட்டவர் அல்ல. அப்படியிருக்க இந்தப் பார்ப்பனர்கள் இப்போது கமிஷனை பஹிஷ்கரிக்க ஒப்புக்கொண்ட காரணம் இதுவரை தாங்கள் ஏகபோகமாய் அனுபவித்துவந்த உத்தியோகங்கள் இனி ஏற்படப்போகும் சீர்திருத்தத்தின் பலனாய் எல்லோருக்கும் கிடைக்கும் படியாய் போய்விடுமோ என்கின்ற பயத்தால அல்லாமல் வேறு என்னகாரணம் சொல்லமுடியும்.

இனி ஏற்படப்போகும் சீர் திருத்தத்தின் பலனும் பாமர மக்களுக்கு ஒரு பலனும் உண்டாகாது என்பது உறுதியானாலும் இதனால்ஏற்படும் உத்தியோகங்களாவது எல்லா சமூகத்தாருக்கும் சற்றேறக்குறைய சமமாகக் கிடைக்கும் படியாக இருக்கும் என்பதற்கு சில அடையாளங்கள் காணப்படுகின்றன. என்னவெனில் கமிஷனில் இந்தியர்களில் யாரையும் நியமிக்காததே ஒரு அடையாளம என்றுகொள்ள வேண்டும். நியமிப்பதானால் பார்ப்பனர்களைத்தவிர வேறு யாரையும் நியமித்திருக்க முடியாது. அப்படி மீறி நியமித்திருந்தாலும இப்பார்ப்பனர்கள் இதே மாதிரி கூச்சல்தான் போடுவார்கள். இரண்டாவதான அடையாளம் என்னவென்றால் செக்ரிடெரி ஆப் ஸ்டேட் என்னும் இந்தியா மந்திரியாகிய லார்ட் பர்க்கன்ஹெட் பேசியிருக்கும் பேச்சில், இந்தியாவிலுள்ள வகுப்பு பிரிவுகளையும் வகுப்புக் கொடுமைகளையும் உணர்ந்திருப்பதாக காட்டிக்கொண்டார். இது பார்ப்பனர்களுக்கு வயிற்றில் இடிவிழுந்ததுபோல் தோன்றியிருக்கும். ஏனெனில் ஒரு பொறுப்புள்ள அதிகாரியாகிய இந்தியா மந்திரி இந்தியாவில் பல வகுப்பும் வகுப்புக்கொடுமையும் இருக்கின்றதாக ஒப்புக் கொண்ட பிறகு அதற்கு பரிகாரம் செய்யாமல் இருப்பாரானால் அவரைப் பற்றி பொது ஜனங்கள் குற்றமாய் நினைப்பார்கள். அதாவது 'சாக்குச்சொல்லி சுதந்திரம் கொடுக்காமல் தப்பித்துக்கொள்வதற்கு மாத்திரம் இம்மாதிரி வகுப்புப்பிரிவினைகளை காட்டிக் கொண்டாரேயொழிய அதற்குப் பரிகாரம செய்ய முன்வரவில்லை ஆதலால் இது கெட்ட எண்ணத்தின் பேரில் சொல்லப்பட்ட வார்த்தை' என்று சுலபத்தில் சொல்லிவிடுவார்கள் என்பது அவருக்குத் தெரிந்த காரியமாதலால் அதற்குத் தகுந்த பரிகாரம் கொஞ்சமாவது செய்யத்தீர்மானித்துக்கொண்டுதான் இப்படிச் சொல்லியிருப்பார் என்பது பார்ப்பனர்களுக்குத் தெரியும. அன்றியும் சதாகாலமும் இந்து முஸ்லீம் கலவரங்களும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் தகராறுகளும நடைபெற்றுவருவதும் அவர்கள் அறிந்ததே. தவிரவும் ஜனத்தொகையை பொருத்த வரை அதிகமான பதவிகள் கொடுக்க அரசாங்கத்தார் கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் எவ்வளவோ சூழ்ச்சிகளுக்கு இடையில் எவ்வளவோ கஷ்டங்களை பொறுத்துக்கொண்டு சீர்திருத்தத்தை நடத்திக்காட்டி இருக்கின்றார்கள். அப்படி ஏதாவது அதிகமான சுதந்திரங்கள் என்பது கொடுக்கப்பட்டால் அதனால் ஏற்படும உத்தியோகம் முதலிய பலன் முழுதும பார்ப்பனர்களே அனுபவிக்க முடியாமல் போகுமோ என்கின்ற பயம பார்ப்பனர்களுக்கு ஏற்படுவது இயற்கைதான்.

உதாரணமாக, காங்கிரசின் காரியதரிசியாய் ஹோம ரூல் சங்கத்தின தலைவர்களில் ஒருவராய் பெரிய தேசாபிமானியாய் இருந்த சர். சி. பி. ராமசாமி அய்யர் இனி அதிகமான சீர்திருத்தங்கள் வேண்டியதில்லை என்று அரசாங்கத்தாருக்கு சொன்னதும், பனகால் ராஜா இனியும் அதிகமான சீர்திருத்தம வேண்டுமென்று சொன்னதுமே இந்தபயத்திற்கு போதுமான சாக்ஷியாகும்.

தவிர, பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் இரட்டை ஆட்சி ஒழிந்து மாகாண சுயாட்சி ஏற்பட்டால்தான் உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ள அதாவது சர்க்காருடன் ஒத்துழைக்க முடியும் என்று சொன்னதும காங்கிரஸ் மகாசபை என்பது அரசாங்கத்தாரின் மனப்பான்மை மாற்றமடைந்ததாக ஜாடை காட்டினால் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம் என்று சொன்னதும் இவ்வருஷக் காங்கிரசில் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாமல் சமயம் போல் நடந்து கொள்ள சவுகரியமிருக்கும்படி இடம் ஏற்படுத்திவைத்துக்கொண்டதும் மற்றொரு சாசாக்ஷியாகும்.


தவிர, ராயல் கமிஷன் பகிஷ்காரத்திற்கும் எவ்வளவு தூரம் தயாராயிருக்கிறார்கள் என்பதற்கும் அதில் எவ்வளவுதூரம் நாணயம் இருக்கின்றது என்பதற்கும் தலைவர்கள் என்பவர்களின் நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் கவனித்தால் விளங்காமல் போகாது.

ராயல் கமிஷன் என்பது இந்தியர்களுக்கு என்ன வேண்டும் என்பதையும் எவ்வளவுதூரம் அதை அனுபவிக்க யோக்கியதை உடையவர்களாயிருக்கின்றார்கள் என்பதையும் கொடுத்தவைகளை அப்படி உபயோகித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் அறிவதற்காக பார்லிமெண்டாரால்ஏற்படுத்தப்பட்ட ஒரு விசாரணை கமிட்டி என்பதுதான் தாத்பர்யம். இதைபகிஷ்கரிப்பது என்பது என்னவென்று பார்ப்போமானால் இந்த விசாரணைக்கு எந்தவிதமான உண்மைகளும் போய்ச் சேர வொட்டாமல் செய்வது என்பதுதான் கருத்தாயிருக்கவேண்டும.

இந்நிலையில் பகிஷ்காரத் தீர்மானத்தினுடையவும் பகிஷ்காரக்காரருடையவும் யோக்கியதையைப் பார்ப்போம.

பகிஷ்காரக்காரர்கள் இதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் 'யாரும் போய் சாக்ஷி சொல்லக்கூடாது, சட்டசபையில் ஏற்படுத்தும் கமிட்டியில் யாரும் மெம்பராயிருக்கக் கூடாது கமிட்டி மெம்பர்களுக்கு மரியாதை செய்யக்கூடாது' என்று மாத்திரம் தீர்மானங்கள் செய்துவிட்டார்களே ஒழிய அவர்கள் கோரிவரும் காரியம் தடைப்படுவதற்கு எவ்வித முயற்சியும் செய்யாமல் இருப்பதுடன் உதவியும் செய்ய ஆள் மேல் ஆள் முந்திக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அதாவது பகிஷ்காரத்தில் தீவிர முயற்சி உடைய பெசண்டம்மையார் இந்தியாவுக்கு வேண்டியது இன்னது என்பதாக ஒரு திட்டம் போட்டு பார்லிமெண்டில்முன்னமேயே ஒப்புவித்து விட்டதோடல்லாமல் இப்போதும் ஊர் ஊராய் மாகாணம் மாகாணமாய்ப்போய் கூட்டம் கூட்டி அதை பொது ஜனங்கள் ஒப்புக்கொண்டதாகப் பெயர் செய்து கொண்டு அதை சீமைக்கு தந்தி அடிக்கச் செய்து கொண்டு வருகின்றார். மாஜி காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியார் தான் ஒரு திட்டம் போட்டு பார்லிமெண்டிலுள்ள தனது சிநேகிதருக்கும் மற்றும் பத்திரிகைகளுக்கும் அனுப்பி தெரியப்படுத்தி விட்டார்.

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு மார்கழி-24-உ

## புதுவருஷவிண்ணப்பம்

புது வருஷ விஷயமாய் நாம் எழுதுவதில் அரசியல் விஷயத்திற்கு பிரதானம் கொடுத்து எழுதவாவில்லை: ஏனெனில் 'அரசியல் விஷயத்தை மிகுதியும் அலட்சியமாய் கருதவேதே 'குடி அரசின்' கொள்கை என்று பொது ஜனங்கள் எண்ணும்படி இருக்கவேண்டும் என்பதே நமது கவலை. ஆனாலும் அரசியலின் பேரால் மக்கள் ஏமாற்றப்படும் நிலைமை ஏற்படும்போது அலட்சியமாய் இருப்பதற்கில்லாமல் அதன் புரட்டுகளை வெளியாக்க வேண்டிய நிலையில் அரசியலைப்பற்றியும் எழுத நேரிடுகின்றது. மற்றபடி தேசியம் அரசியல்என்கிறவைகள் எவ்வளவுக் கெவ்வளவு மக்களால் மறக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் விடுதலை உண்டு எனபது நமதபிப்பிராயம். நிற்க இந்த தலையங்கத்தில் நாம்எழுதப்புகுந்ததெல்லாம் புது வருஷத்தின் நிலை நமது முயற்சிக்கு எவ்வளவு பயனளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ளவேதான். எனவே நாம் யோசித்து பார்க்கும் அளவில் புது வருஷத்தில்நமக்கு பலஇடையூறுகள் தோன்றுலாம் என்பதாகவே அறிகின்றோம். அவ்விடையூறுகளை லட்சியம் செய்யாத வரை பலனுண்டாகும் என்றும் லட்சியம் செய்து அதற்கு ஏதாவது இணங்க இடம் தந்தால் காரியம் கெடக்கூடும் என்றும் அஞ்சுகின்றோம்.

இந்த சமயம் நமது முயற்சிக்கு எவ்வித உதவியும் ஆதரவும அனுதாபமுமாவது இருப்பதாக காண முடியவில்லை. ஆனாலும் எதிர்ப்புக்காரர்களுக்கும் போதிய பலமோ ஆதரவோ இருப்பதாகவும் தெரியவில்லை. ஆரம்பத்தில் நாம் வெள்ளைக்காரருடன் வரதாடி மக்களின் இடுக்கண்களை விடுவிக்க கிளம்பினோம். அதில் இறங்கியதன் பலனாய் வெள்ளைக்காரரைவிட பார்ப்பனர்களிடமே மிகுதியும் வாதாடவேண்டியிருக்கின்றது என்று கருதினோம். அதில் இறங்கியதன் பயனாய் பார்ப்பனர்களைவிட நம்மவர்களிடமே வாதாடவேண்டியதாய் பல விஷயங்கள் காணப்படுகின்றன. இதை ஒரு உதாரணமாக விளக்கவேண்டுமானால், நமது விடுதலையை வெள்ளைக்காரர்கள் பறித்துக் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள் என்று உணர்ந்து அவர்களிடம் இருந்து அதைப் பிடுங்கிவர முயற்சித்ததில், நமதுவிடுதலையை அவர்கள் தங்கள் வீட்டில் வைத்துப்பூட்டிக்கொண்டு அதற்குகாவலாக நமது பார்ப்பனர்களையே காவல்காக்கவைத்திருக்கின்றார்கள் என்பதும் நமது பார்ப்பனர்களும் மிக்க எஜமான விஸ்வாசத்துடன் வெள்ளைக்காரர்களுக்கு காவல் காத்து வருகிறார்கள் என்பதும் நன்றாய் உணர்ந்து விட்டோம்.

எனவே நமது விடுதலை என்பதை நாம் கைப் பற்ற வேண்டுமானால் காவல்காரர்களை விரட்டி அடிக்காமல் முடியவே முடியாது என்பது கண்டுதான் எதிரியின் காவல்காரர்களான பார்ப்பனர்களை அக்காவலிலிருந்து விரட்டத் துணிந்தோம்.

இந்த முயற்சியில் தீவிரமாய் ஈடுபட்டதின் பலனாய் ஷை காவல்காரர்களை உண்டாக்கவும்போஷிக்கவும்நம்மவர்களேஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்நம்மவர்களே அவர்களுக்குஆகாரம்கொடுத்துவளர்த்துவலுவுண்டாக்கி நமது விடுதலையைக்கைப்பற்றி இருக்கும் வெள்ளைக்காரர்களின் காவலுக்கு அனுப்பி வருகிறார்கள். ஆகவே நமது போஷணையை நிறுத்திக்கொண்டால் பார்ப்பனர்கள் வெள்ளைக்காரனுக்கு காவலாளாய் இருக்க முடியாது என்பதும, பார்ப்பனர்களின் காவல் ஒழிந்தால் வெள்ளைக்காரர்கள் நமது விடுதலைக்கு விரோதமாய் இருக்கமுடியாது என்பதும நமது முடிவு. எனவே அப்பார்ப்பனர்களுக்கு எவ்வெவ்வழியில் நியாயமற்ற போஷணைகிடைக்கின்றதோ அவ்வவ்வழிகளையெல்லாம் அடைத்துத் தீரவேண்டும். என்கின்ற முயற்சியில் இறங்கி இருப்பதற்கு இதுவும் ஒருகாரணமாகும். இம்முயற்சி தான்சிலருக்கு நாம் நம்மவர்களுடன் போரிடுவதாகக் காணப்படுகின்றது.

மதவிஷயத்திலும் சாஸ்திரபுராணவிஷயத்திலுங்கூட 'குடி அரசு' கைவைத்துவிட்டது என்றுமதபக்தர்கள்என்போர்கள் சத்தம்போடநேரிட்டதும்;தேசியவிஷயத்தில் கூட கையை வைத்துவிட்டது என்று தேசபக்தர்கள் எனபோர்கள் சத்தம் போட ஏற்பட்டதும இதனல் தானேயல்லாமல் வேறல்ல.

இந்து மதம் என்பதும் அதன் பெயரால் உள்ள சாமிகள், கோவில்கள், பூஜைகள், திருவிழாக்கள் முதலியவைகளும் அதற்காக ஏற்பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் இதிகாசங்கள் என்பவைகளும் பார்ப்பான் பிழைக்கவும், பார்ப்பான் உயர்ந்தவன் என்கின்ற ஆதிக்கம் பெறவுமே ஏற்பட்டதேயல்லாமல் உலகத்திற்கோ அல்லது பார்ப்பனர்களைத் தவிர வேறு எந்த ஜனசமூகத்திற்கோஒரு சிறுதுரும்பளவு பிரயோஜனமுமஉண்டாக்குவதற்கல்லவென்று உறுதியாய் நம்புகிறோம். நித்திய வாழ்க்கையாலும் இதை பிரதிதினமும் அநுபவத்தில் உணர்ந்தும் வருகிறோம்.

இதை நாம் வெளியிடும்போதும் மாற்றும்படி மக்களை வேண்டிக்கொள்ளுகின்ற போதும். மதக்காரர், சாஸ்திரக்காரர், புராணக்காரர் என்பவர்கள் நமமீது பாய்கின்றார்கள். அப்படிப் பாய்கின்றபோது மதத்தைப் பற்றியும், சாஸ்திரத்தைப் பற்றியும, புராணத்தைப் பற்றியும் இவைகளின் மூலம் தானாகவே ஏற்படும் பார்ப்பன ஆதிக்கத்தைப் பற்றியும் நாம் சொல்லும் விஷயங்களுக்கு ஒரு சிறிதும் சமாதானம சொல்லாமலும், பதிலளிக்கக் கருதாமலும், வேண்டுமென்றே அவைகளை மறைத்து விட்டு கடவுள் போச்சே என்று துக்கப்படுகிறவர்கள்போலவும், கடவுளை காப்பாற்றப் பிறந்திருக்கிறவர்கள் போலவும் வேஷம்போட்டுக்கொண்டு வெளியாகி 'குடி அரசு நாஸ்திகம் போதிக்கின்றது. என்ற ஆயுதத்தை எடுத்துக்கொண்டு மனமறிந்த பித்தலாட்டம் என்கின்ற பூமியின் மீது நின்று கொண்டு நம்முடன் போர் தொடுக்க வருகின்றார்கள். இக்கூட்டமும் இப்போதும் இப்புது வருஷத்தில் பலப்படும் என்பதே நமதபிப்பிராயம். இக்கூட்டத்தாருக்கு உண்மையில கடவுளிடத்தில் நம்பிக்கை இருக்குமானல் 'குடி அரசு' கடவுளை ஒழித்துவிடமுடியும் என்கின்ற பயமும் தங்களால் தான் கடவுளை காப்பாற்ற முடியும் என்கின்ற எண்ணமும் ஒருக்காலமும் ஏற்பட நியாயமே இருக்காது என்றுவது அல்லது இவர்கள் போருக்குகிளம்பியிருக்கும் கருத்து கடவுள் மறைந்து போவார் என்று இல்லாமல், இவர்களது மதமும், சாஸ்திரமும், புராணமும் என்பவைகள் மறைந்து போகுமோ என்பதானபயமாய்த்தான இருக்கவேண்டுமென்றுவது பொதுமக்கள் நினைப்பதில்லை. ஆகவே சாஸ்திரத்தையும் புராணத்தையும் காப்பாற்ற ஆசைப்பட்டு கடவுள் பேரில சாக்கிட்டுக்கொண்டு வெளிக்கிளம்பும் கோழைப் போரை லட்சியம் செய்யாமல் இருந்தாலொழிய நமக்கு வெற்றி மார்க்கம் ஏற்படுவது அரிது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் மதம் சாஸ்திரம் புராணம் எனபவைகளைப்பற்ற இப்போது எங்கு பார்த்தாலும் ஜனங்களுக்குள் அதிருப்தியும், அவநம்பிக்கையும், எதிர்பிரசாரங்களும் ஏற்பட்டிருப்பதை இக்கூட்டத்தார்கள் உணர்ந்து பார்க்கட்டும்.

மேல்நாடுகளில் மனித சுதந்திரத்திற்காக எவ்வளவு பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றது என்பதும், வெளிமாகாணங்களில்எவ்வளவுதூரம்இவைகளைஎல்லாம்அலட்சியம் செய்துவிட்டு உண்மை விடுதலை அடையும் முயற்சிக்கு கூட்டம் கூட்டமாய் மக்கள் கிளம்பி இருக்கின்றார்கள் என்றும உணர்ந்து பார்க்கட்டும்.

அரசியல்தலைவர் என்பவரும் வட நாட்டு ஆரிய நமானமோதிலால்நேருஎனபவர்சமீபத்தில்பிராணசுதேசத்தில்இநதியவாலிபர்களிடம் பேசும்போது "வகுப்பு வித்தியாசங்கள் அடியோடு அழியத்தக்க உணர்ச்சிகளை வளர

க்க வேண்டும் என்றும் அதற்காக மதத்தையும் மறக்கத் தயாராயிருக்க வேண்டும்'' என்றும் பேசியிருக்கின்றார்.

சுருக்கமாய்ச் சொன்னால் நமது முயற்சியின் கருத்தும் இதுவே யாகும். எனவே வகுப்புப்பிரிவு உணர்ச்சி மறைய வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் என்று பார்க்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் தான் இன்ன வகுப்பு இன்ன மதம் இன்ன கொள்கையை உடையவன் என்று ஒருவருக்கொருவர் பிரிந்து நிற்கத் தகுந்த நிலைமைக்கு ஆதாரங்கள் என்னென்ன உண்டோ அவைகள் எல்லாம் அழிந்து மறைபடவேண்டும். நாம் எல்லோரும் ஒரு நாட்டினர் என்றும் நாம் எல்லோரும் சமம் என்றும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருக்க கடமைப்பட்டவர்கள் என்றும் கருதக்கூடிய உணர்ச்சிகள் பெருக வேண்டும். இதுதான் நமது முயற்சியின் தத்துவம் என்று மறுபடியும் கூறுகிறோம். தற்காலம் நமது நாட்டில் விளங்கும் மதம் புராணம் சாஸ்திரம் என்பவைகள் எல்லாம் பெரும்பாலும் இம்முயற்சிக்கு இத்தத்துவத்திற்கு இடையூறாயிருக்கின்றது என்று கருதுவதால்தான் அவைகளை மக்கள் மறந்துவிட வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகின்றோம். அது சரியா தப்பா என்பதைப் பற்றி சமாதானம் சொல்லாமலும் இடையூறாயிருக்கும் பாகத்தை எடுத்துக்காட்டும் போது அதற்கு சமாதானம் சொல்லாமலும் 'நாஸ்திகம் நாஸ்திகம்' என்கின்ற பூச்சாண்டியையே விட்டு மிரட்டுவதால் என்னபயன் விளைந்து விடக்கூடும்?

நாஸ்திகம்:— நாஸ்திகம் என்றால் என்ன என்பதையும் மக்களுக்கு வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம் :—.

முதலாவது நாஸ்திகம் என்கின்ற சொல் எந்த பாஷையில் உள்ளது? அதற்கு சரியான தமிழ் சொல் என்ன? நாஸ்திகம் என்கின்ற சொல் எந்த பாஷையிலுள்ளதோ அந்த பாஷையில் நாஸ்திகம் என்பதற்கு என்ன பொருள் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்தால் அறிவாளிகள் இந்த நாஸ்திகம் என்கின்ற பூச்சாண்டிக்கு பயப்படமாட்டார்கள்.

நாஸ்திகம் என்பது ஆரியபாஷைச்சொல். தமிழில் அக்குறிப்பைஉணர்த்தத்தக்க சொல் ஒன்று இருப்பதாக நாம் அறிந்ததில்லை. நாஸ்தி என்றால் இன்மை என்றும் ஆஸ்தி என்றால் உடைமை என்றும் தான் பொருள் உண்டு. நாஸ்திகன்-இல்லாதவன், ஆஸ்திகன்-உடையவன், எனவே இந்தப் பதங்கள் எப்படி கடவுளை சம்மந்தப்படுத்திக் கொண்டன என்பதை யாராவது சொல்லக்கூடுமா என்று கேட்பதுடன் தமிழ் மொழியில் இந்தக் கருத்தையுடைய சொல்லோ வழமையோ இருப்பதாக சொல்லக்கூடுமா என்றும் கேட்கின்றோம். ஆரிய பாஷையிலும் ஆஸ்திகன் நாஸ்திகன் என்கின்ற பதங்கள் கடவுளைக் குறிக்காமல் வேதத்தைக் குறித்துத்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஆரிய பாஷையில் நாஸ்திகன் என்கின்ற பதத்திற்கு வேதத்தில் நம்பிக்கை இல்லாதவன் என்று தான் பொருள் கொடுக்கப்பட்டிருக்கின்றதே ஒழிய இவ்வார்த்தைக்கு கடவுளை எந்த இடத்திலும் சம்மம்மந்தப்படுத்தப்பட்டிருப்பதாக காணமுடியவில்லை.

நிற்க, கடவுளை நம்புகிறவன் நம்பாதவன் என்கின்ற கேள்வி பிறக்குமானால் அந்தக் கேள்வியானது கடவுள் தன்மை இன்னது என்று அறியாதவர்களிடமிருந்து தான் புறப்படவேண்டும். ஆதலால் அதைப்பற்றி நமக்கு ஒரு சிறிதும் கவலையில்லை என்று சொல்வதோடு சைவம் என்றும், வைணவம் என்றும், ஸ்மார்த்தம் என்றும் மற்றும் பல பல விதமாகவும் பலபேராகவும் மதங்களைப் பிரித்துக்கொண்டு உயர்வு தாழ்வுகளை கற்பித்து தன்தன் மதமே பெரிது அதனதன் ஆதாரங்களே சத்தியமானது என்று பிடிவாதம் கொண்டு ஒன்றொன்றைக் கும் ஒத்துப்போக மார்க்கமில்லாமல் விதங்களைக் கிளப்பிக்கொண்டிருக்கும் அனாவசியமான பொழுது போக்குகளும் நோக்கேடுகளும் ஒழியவேண்டும். ஆகலால் நமது உண்மையான லக்ஷியம் இன்னது என்று உணர்ந்துகொண்டவர்களும் அதை மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டவர்களும் ஒரு போதும் இம்மாதிரி விகல்பத்திற்கு ஏதுவான மதத்தொல்லைகளில் கவனத்தைச் செலுத்தமாட்டார்கள் என்றே நினைக்கின்றோம்.

முடிவாக நாம் புது வருஷத்தின் பேரால் பொது மக்களை கேட்டுக்கொள்வதென்னவென்றால் வெள்ளைக்காரரின் தற்காலத்திய ராஜ்ய பாரம நமக்கு—நமது நாட்டுக்கு—நமது நாட்டு ஏழை மக்களுக்கு பெரிய ஆபத்தாய் இருக்கின்றது. இவ்விபத்தான ராஜ்ய பாரத்தை நமது நாட்டுப் பார்ப்பனர்கள் நடத்திக்கொடுத்து பங்கு வாங்கிப் பிழைத்து வருகிறார்கள். அப்பார்ப்பனருக்கு நமது மக்கள் மதத்தின் பேரால் சாஸ்திரத்தின் பேரால் புராணத்தின் பேரால் புராணச்சாமிகளின் பேரால் அடிமைப்பட்டு ஆக்கம் தேடிக்கொடுத்து வருகின்றார்கள். எனவே இவைகளை சரிப்படுத்த அஸ்திவாரத்திலிருந்து வெட்டி எறிய வேலை செய்யவேண்டியது நமது கடமை. அஸ்திவாரத்தில் கொஞ்சம் தாக்ஷண்யம் பார்த்து ஒரு சிறுவேரை விட்டு விட்டாலும் மறுபடியும் அது படர்ந்துவிடும். ஆதலால் தயவு செய்து ஒவ்வொருவரும் ஒரே மூச்சாய் கொஞ்சமும் தாக்ஷண்யமோ குருட்டுநம்பிக்கையோ பிடிவாதமோ இல்லாமல் ஊக்கத்துடன் நின்று உதவிசெய்ய வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகின்றோம். இது வெற்றி பெற்றால் தான் நமது நாட்டுக்கு மாத்திரமல்லாமல் மனித சமூக முழுவதுக்குமே சாந்தி உண்டாகும் என்று விண்ணப்பித்துக்கொள்கின்றோம்.

## இராயவரம் திருவள்ளுவர் கலாசாலை திறப்பு விழா.

திரு சு. கதி. கதிரேசஞ் செட்டியாரால் ஆதிதிராவிட சமுதாய முன்னேற்றங் கருதி நிறுவப்பட்ட ஷை கலாசாலை மார்கழி மீ 18-ம் தேதி ஜெயங்கொண்டபுரம் திரு மெ. சு. மெய்யப்ப செட்டியாரால் சிறப்பாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஆ. வேலாயுதம்

காங்கிரசுக்கு

## ஸ்ரீமான் காந்தியின் யோக்கியதா பத்திரம்.

### விளையாட்டுப்பிள்ளைகள் மண் கொழிக்கும் சங்கம்.

சென்ற காங்கிரசைப்பற்றி ஸ்ரீமான் காந்தி தமது 'யங் இந்தியா' பத்திரிகையில் ஜனவரி 5 தேதி எழுதியதாவது,

நான் விஷயாலோசனைக்கமிட்டியின் கூட்டங்களொன்றுக்கும் செல்ல முடியவில்லையெனினும், மிகவும் பொறுப்பற்ற வகையில் பேச்சும், வேலையும் நடந்ததென்றும், ஒழுங்கீனமாய் அங்கத்தினர்கள் நடந்து கொண்டார்களென்றும் தெரிந்து கொண்டேன். இன்னது விளையும் என்று சிந்திக்காமல் முடிவைப் பற்றி யோசனை இல்லாமல் மிகவும் பொறுப்பற்ற தீர்மானங்களை விஷயாலோசனைக் கமிட்டியில் சமர்ப்பித்து அவைகளை அக்கமிட்டியாரும் யோசனையின்றி ஏற்றுக்கொண்டு விட்டார்கள். சென்ற வருஷம் நிராகரிக்கப்பட்ட பூரண சுயேச்சைத் தீர்மானம் நிறைவேறி விட்டது. அது யோசனையில்லாமலே நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்று செய்த தீர்மானமும் அதே மாதிரி சிறிதும் கவலையற்ற தன்மையில் நிறைவேற்றப்பட்டது. காரியத்தில் நடத்த முடியாது என்று அறிந்தும் இத்தகைய தீர்மானங்களை வருஷா வருஷம் காங்கிரஸ் நிறைவேற்றுவதால் தான் அது தன் கௌரவத்தை இழந்துகொண்டு வருகிறது. இப்படிப்பட்ட தீர்மானங்கள் செய்வதால் நமது பலஹீனத்தை வெளிப்படுத்துவதுடன் ஊரெல்லாம் நம்மை நகைத்து, நமது எதிரி நம்மைக் கண்டு ஏளனஞ் செய்யுமாறு நாம் செய்து கொள்ளுகிறோம். காங்கிரசுக்கு பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்கப் பூரண உரிமையுண்டு- ஆனால் இந்திய ஜனங்களின் பிரதிநிதித்வம் வாய்ந்த பிரதம சபையாகிய அது வீண் மிரட்டல்களினால் அவமானத்திற்கு ஆளாகக் கூடாது. இங்ஙனம் தீர ஆலோசியாமல் தீர்மானங்களை வெறும் காகித அளவில் செய்து பொது மக்களின் தேவையையும், அபிலாஷைகளையும் கருதாமல் காங்கிரஸ் போய்க்கொண்டிருந்தால் முன்னிருந்த செல்வாக்கும் பலமும் அதற்கு மீண்டும் வாராது. திரும்பவும் காங்கிரஸ் அந்த உன்னத ஸ்திதிக்கு வரவேண்டுமாகில், அதன் அங்கத்தினர்கள் தேசத்தின் ஊழியர்களாய்த் தங்களைப் பாவித்துக்கொண்டு ஒழுக்கத்தையும், நேர்மையையும் கடைப்பிடித்து நடந்து கொள்ள வேணடும். ஆனால் தற்போது வெறும் பள்ளிக்கூடப் பையன்களைப்போல் தான் அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள். அவ்வளவு தாழ்ந்தநிலைக்குக் காங்கிரசும் வந்துவிட்டது.

காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியார் தங்கள் ஆதரவில் அகில இந்திய தேசிய கண்காட்சி என்ற பெயருடன் பிரிட்டிஷ் சாமான்களையும் அன்னிய நாட்டு சரக்குகளையும்

விளம்பரப் படுத்த இடம் கொடுத்தது பெருந்தவறாகும். அதில் சுதேசி சாமான்கள் வெகு குறைவாகவேயிருந்தன. இந்தக் கூத்து பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்று திட்டஞ் செய்து சுதேசியத்தை வளர்க்கும் காங்கிரசின் ஆதரவிலேயே நடக்கிறது! காங்கிரசின் அடிப்படையான நோக்கத்திற்கே அது விரோதமாகும். யோசனையின்மையும், சிரத்தைக் குறைவும், பொறுப்பற்ற தன்மையும் தான் இதற்குக் காரணங்கள் என்று சொல்லுவேன். இது மிகவும் வெட்கக் கேடானது என்று கூறாமலிருக்க முடியவில்லை.

குறிப்பு:— அதற்கு ஏற்றாற்போல் ஸ்ரீ எஸ் சீனிவாசய்யங்கார் அவர்களும் காங்கிரஸ தீர்மானமெல்லாம் வியாபாரத் தீர்மானமே ஒழிய உண்மையான தீர்மானம் அல்ல என்று சொல்லிவிட்டார். இப்பொழுதாவது காங்கிரசைப் பற்றியும் காங்கிரஸ தலைவர்கள் என்பவர்களைப் பற்றியும் 'குடி அரசு' எழுதிக்கொண்டு வரும் விஷயங்கள் உண்மை என்பது விளங்கவில்லையா என்று பொது மக்களை கேட்கின்றோம்.

## இங்கும் அங்கும்

'திராவிடன்' பத்திரிகையும், திராவிடர் மகாநாடும், வகுப்பு துவேஷமும் தேச முன்னேற்றத்திற்கு தடையுமானதாம். இதை பார்ப்பனர்கள் மாத்திரம் சொல்வதில்லை, பார்ப்பனரல்லாதார்களில் சில கோடாலிக்காம்புகள் சொல்லுகின்றன.

ஆரியர் பத்திரிகையும், ஆரியர்கள் மகாநாடும், வகுப்பு ஒற்றுமையும் தேசாபிமானமும் கொண்டதாம், இதற்கு சில கோடாலிக்காம்புகள் தங்களையும் ஆரியர்கள் என்று சொல்லிக்கொண்டு போயிருக்கின்றனவாம்.

## இனியும் சந்தேகமா?

மனுதர்ம சாஸ்திரத்தைக்கொளுத்துவதை பற்றி ஆசாரச்சீர்திருத்தப் போர்வையை போர்த்துக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் பம்பாய் கே. நடராஜர் என்கிற பார்ப்பனரே வெகு தூரம் துக்கப்பட்டார் என்றால் மற்ற பிராமணர்கள் வருணாசிரம மகாநாடு கூட்டுவதில் நாம் ஒன்றும் அதிசயப்படவில்லை. ஆனால் இன்னமும், பார்ப்பனர்கள் வருணாசிரமப் பிரசாரமும் மகாநாடும் நடத்த தைரியமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பது தெரிந்த பின்னும், பார்ப்பனர்களும் நாமும் சகோதரர்கள் என்று சொல்லிக் கொள்ள உரிமை உண்டா என்றுதான கேட்கின்றோம்.

## புது வருஷத்திய பஞ்சாங்கம்.

(1) திருத்தங்கல் 'கம்பாலன்' பத்திராதிபர் ஸ்ரீமான் ஆர். வெங்கடசாமி, (2) மதராஸ் சூளை அச்சியந்திரசாலை செல்சன் கம்பெனியார், (3) சிங்கப்பூர் மார்கட் வீதி ஸ்ரீமான் ஓ. ராமசாமிநாடார் கம்பெனியார், 4. சேலம் மின்சார ரசம் கம்பெனியார் ஆகிவர்கள் நமக்கு அனுப்பியிருக்கும் தத்தம் கம்பெனியின 1928-ம் வருஷத்திய அழகிய காலண்டர்களை வந்தனத்துடன ஏற்றுக்கொண்டோம்

## விளங்கவில்லை.

ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பு அவர்கள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயம் ஒருவாறு முடிவு பெறவேண்டும் என்று பார்ப்பனத் தலைவர்களுக்கு எழுதியிருக்கின்றார். இதற்கு பார்ப்பனர்கள் நேரே பதில் சொல்லி விட்டார்கள். அதாவது 'தேசம் பெரியதே ஒழிய பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயம் பெரிதல்ல, ஆதலால் இந்த சமயத்தில் இதை எல்லாம் பேசுவது தப்பு' என்று சொல்லி விட்டார்கள். ஸ்ரீ ஜோசப்பு அவர்களுக்கு இதை எழுதுவதற்கு முன்பே பார்ப்பனர்கள் இப்படித்தான் சொல்லுவார்கள் என்பது தெரியாமல் போய்விட்டதா? அல்லது தெரிந்திருந்தாலும் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் தனக்கும் அக்கறை இருப்பதாய் காட்டிக்கொள்ளலாம் என்றோ என்பது நமக்குவிளங்கவில்லை.

---

## வாணியம்பாடி
## இந்து பால்யர் தமிழ் சங்கம்.

1928 ஜனவரி மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மேற்படி சங்கத்தின் வருஷாந்திர கொண்டாட்டம். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீ ராவ் பகதூர் பி. முனிசாமி நாயுடு காரு பி. ஏ. பி. எல், தலைமையின்கீழ் பழனிபாண்டி கட்டிடத்தில் நடை பெற்றது. அது சமயம் வேலூர் ஸ்ரீமான் கே. பி. சந்தோஷம் பி ஏ எல் டி, அவர்கள் தமிழ் சங்கம் என்பதை பொருளாகக்கொண்டு ஒரு சொற்பெருக்கொன்று நிகழ்த்தினார்கள்.

---

## சென்னை மாகாண பதினாறாவது
## ஆதிதிராவிட மகாநாடு.

நிகழும் 1928 வருடம் ஜனவரி மாதம் 8ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரையில் சென்னை அர்மீனியன் வீதியிலுள்ள கோக்கேல் மண்டபத்தில் கூடும். யாவரும் தவறாமல் வரக்கோருகிறோம். கனம் ஜி ஏ கௌவி எம் எல் சி (நாக்பூர்) அவர்கள் தலைமை வகிப்பார்.

கனம் ராவ்பகதூர் எம் சி ராஜா எம் எல் ஏ அவர்கள் மகாநாட்டை திறந்துவைப்பார்.

கனம் பண்டிட் திரு ப. ம. பழநிசாமி பிள்ளை அவர்கள் ஆதிதிராவிடர்களின் விருதுகொடி யேற்றுவார்.

சுவாமி ச ஜானந்தம் எம் எல் சி வரவேற்புக்கழகத் தலைவர்.

களத்தூர் முனிசாமி பிள்ளை, ஜெ சிவஷண்முகம், திரு ம ப பரஸ்பாணி பிள்ளை காரியதரிசிகள் டி சின்னையா

---

## புதுச்சேரியிலும் சுயமரியாதை.

பிரபல வியாபாரம் செய்யும் ஸ்ரீமான் வீ வே வேணுகோபால் செட்டியாருடைய சகோதரரும் கூட்டாளியுமாகிய மந்திபாளயம் ராமசாமி செட்டியார் அவர்கள் காலஞ்சென்ற தமது தயாரின் வருஷாந்திர திதியாகிய ஜனவரிமாதம் 4தேதி யன்று புரோகிதத்தை ஒழித்து ஏழைகளுக்கு அன்னமளித்தார்.

கே சுந்தரராஜுலு

(9-ம பக்கத் தொடர்ச்சி)

மற்றொருவர் அதாவது சமீபத்தில் மாஜியான காங்கிரஸ் தலைவராகிய ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் ஒரு திட்டம் போட்டு புஸ்தக ரூபமாச்சி ஆயிரக்கணக்கான பிரதிகளை எல்லாருக்கும் வினியோகித்துக்கொண்டுவருகின்றார். காங்கிரஸ் தீர்மானத்திலும் 'வகுப்பு உரிமை கூடாது தனித்தொகுதி கூடாது' என்பதுபோன்ற விஷயங்களை தீர்மான ரூபமாகச் செய்து வெள்ளைக்காரர்களும் கமிட்டி மெம்பர்கள் அறியும்படியும் செய்தாய் விட்டது. அதில் இந்தியத்தேசியத் தலைவர்என்ற பண்டிதர் நேரு அவர்களும் சமீபத்தில் பிரான்சில் பேசியபோது இந்தியாவின் கோரிக்கைகளை கமிட்டி முன்னால் சமர்ப்பித்து விடுவதைத்தவிர மற்றவைகளை பகிஷ்கரித்து விடவேண்டும் என்று சொல்லிவிட்டார். காங்கிரஸ் மகாசபை தலைவரான டாக்டர் அன்சாரி அவர்களும் 'எல்லா வகுப்பார்களும் எல்லாவித அரசியல் கட்சிக்காரரும் ஒன்று சேர்ந்து ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும்' என்று சொல்லியிருக்கின்றார்.

மிதவாதிகள் என்பவர்களும் ஒரு திட்டம் போட்டும் சிலர் பெசண்டம்மையின் திட்டத்தை ஆதரித்தும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை காட்டியாய் விட்டது.

இவ்வளவும் அல்லாமல் பகிஷ்காரத்தின் அறிகுறியாய் சட்டசபையை விட்டு விலகவோ கமிஷன் வந்து போகும் வரையிலாவது சட்டசபைக்கு போகாமலிருக்கவோ கூட முடியாது என்று தீர்மானித்தாய் விட்டது. ஆகவே பகிஷ்காரம் என்பதை எந்த முறையில் மதிவைத்திருக்கின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆகவே கூலிப் பிழைப்புக்காரரான ஜட்கா வண்டிக்காரரும் ஒற்றைமாட்டு வண்டிக்காரரும் ரிக்ஷா வண்டிக்காரரும் வேலை நிறுத்தம் செய்வதிலும் வெற்றிலை பாக்கு சிகரெட் பீடி கடைக்காரர்கள் கடைகளை மூடுவதிலும் கமிஷனில் வரப்பட்ட கமிட்டி மெம்பர்களுக்கு நடத்தப்படும் தேயிலைப்பானத்திற்கு போகாமலும் காலிகளுக்கு கூலிகொடுத்து தெருவில் போகின்றவர்கள் மீது கல்லெறிவதிலும் மாத்திரம் பகிஷ்காரம் இருப்பதானால் யோக்கியர்கள் இதை ஒப்புக்கொள்ள முடியுமா என்றுதான் கேட்கின்றோம்.

மற்றகூட்டத்தை சேர்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டியதை கமிஷனுக்கோ வெள்ளைக்காரருக்கோ தெரியப்படுத்த வேண்டுமானால் அவர்களும் இந்த மாதிரி திட்டம் போட்டு கமிஷன் முன்னால் சமர்ப்பிப்பதைவிட நேரில் போய் சொல்லி விடுவதால் ஏற்படும் நஷ்டம என்ன என்றுதான் கேட்கின்றோம். அவராடி இவராடி எப்படி பாமர மக்களை ஏமாற்றி ஒரு வகுப்பாரே ஆதிக்கம பெறுவதெப்படி. உயர்ந்த பதவிகளையும் உத்தியோகங்களும் அடைவதெப்படி? பெரும் பெரும் சம்பளம் பெறுவதெப்படி? என்பதல்லாமல் இந்தப்புரட்டுகளால் தேசத்துக்குகோ, பாமர மக்களுக்கோ, ஏற்படும் பயன் என்ன என்று கேட்கின்றோம்.

---

பகிஷ்கார பிரசாரம் செய்யும் 'தமிழ்நாடு' கமிஷன் மெம்பர்களின் படத்தை விளம்பரம் செய்திருப்பது என்னே!

## உண்மை நோக்கம்.

தூத்துக்குடி ஸ்ரீகா. சோம சுந்தரம் பிள்ளை "நவசக்தியில்" "இந்துமதமும் வைக்கம் வீரரும்" என்றெழுதிய கட்டுரைக்குத் திருநெல்வேலி ஸ்ரீ சுந்தரம் "நவசக்தியில்" எழுதும் சமாதானமாவது:—

சென்ற கார்த்திகைமீ 22உ "நவசக்தி" இதழில் தூத்துக்குடி ஸ்ரீ கா. சோமசுந்தரம் பிள்ளை என்பார் "இந்து மதமும் வைக்கம் வீரரும்" என்ற தலைப்பின் கீழ் சில ஐயப்பாடுகளும் வினாக்களும் முடிவுகளும் மிக ஆத்திரமாக எழுதியிருக்கிறார். பெரியார் இராமசாமி நாயக்கர் அவர்களை ஆராய்ச்சி செய்யப் புகுந்தயிடத்து "இந்து மதத்தை ஆராய்ச்சி செய்து பேசுகிறார்" "இந்துமத சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்து" என்று பெரியார் முறையிலும், போதனை முறையிலும் எழுதி இருக்கிறார். இந்த இரண்டு பதவியை வகுத்த நமது நண்பர், கொரான், பைபிள் போன்ற சாத்திரம் இந்துமதத்திற்கு எது? அதன் ஆசிரியர் யார்? அதன் கொள்கை என்ன? என்று போதித்திருக்கலாம். அது தான் உண்மை அநுதாபங் கொண்டவரின் பொறுப்பாகும்- வீணே பரிதாபங்கொண்டவர் போல் பாவனை காட்டுவது முயற்சியுடையோரை இகழ்ச்சி செய்வதொக்கும்.

சைவம், வைணவம், சமணம், பௌத்தம், துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம் வீரசைவம் முதலிய மதங்கள் யாவும் சேர்ந்த மக்கட் கூட்டத்தையன்றோ இந்த மதக் கூட்டத்தார் எனக்கருதுவது? அல்லாமல் மேற்கண்ட தனிப்பட்ட மதங்கள் போல் இந்து மதமென்று ஒரு தனிப்பட்ட மதமாவது அதற்கு ஒரு நூலாவது கொள்கையாவது உண்டா? நமது நண்பர் இந்து மதத்தவரா? அல்லது மேலே சொல்லியிருக்கிற தனிப்பட்ட மதங்களின் ஒன்றைச் சார்ந்தவரா? என்று தான் கேட்கின்றோம்.

நமது முன்னோர்கள் "அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர், புத்தர், ஆழ்வாராதிகள் முதலியோரெல்லாம் இந்து மதம், இந்து மதம்"—என்று வாய்ப்பறை சாற்றி வயிறு வளர்க்கவுமில்லை, மக்களை மூடநம்பிக்கையால் எதையும் நம்பும்படி செய்யவுமில்லை, மூட பக்தியால் கடவுளை வழிபட வேண்டுமென்று போதிக்கவுமில்லை. தங்கள் தங்கள் மதக்கொள்கைகளின் உண்மைகளை மக்கள் மீதுள்ள கருணையால் விளக்கிப்போந்தனர். பெரியார் இராமசாமி நாயக்கர் அவர்களும் நம்முடைய தற்கால வீழ்ச்சியின் நிலையைக் கருதி சுயமரியாதை உணர்வை இடைவிடாது உணர்த்தி வருகின்றனர். அவரவர்களின் மத உண்மைக்கொள்கைகளை ஆதரிக்கும்படிக்கும், சுயநலம் கருதிப் புகுத்தப்பட்டிருக்கும் புதிய போலிக்கொள்கைகளைத் தள்ளும்படிக்கும் வற்புறுத்துகின்றனர். சுயமரியாதையோடு வாழ்ந்த நம் முன்னோர்களின் அடிச்சுவட்டையே பின்பற்றும்படி கெஞ்சுகின்றனர். புதிய மதம் உண்டாக்கிப் புகழ்பெற விரும்பவில்லை என்பதை நமது நண்பர் கண்டிப்பாயறியவும்.

நாயக்கரவர்கள் ஜீவகாருண்யமே மதங்களின் அடிப்படையான தத்துவமென்று போதிக்கின்றார். சுயமரியாதையும் மானமுமுள்ள மக்கள் ஒப்பமுடிந்த உண்மைகளையே மக்களுக்கு அடிக்கடி ஞாபக மூட்டுகின்றார். இந்து மதம், இந்து மதமென்று ஒரு தனிப்பட்ட மதமிருப்பதாக மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் வீணர்களைக் கண்டிக்கின்றார். மக்களின் சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் உடல், பொருள், ஆவி மூன்றையும் தாராளமாய் மக்களுக்குப் பயன் படுத்தி வருகின்றார்.

இத்தகைய செயல்கள் தான் உத்தமர்களின் பணியாகும். நன்முயற்சிகளுக்கு இடையூறுகள் பல தோன்றுவதும், குதர்க்கங்கள் தோன்றுவதும் அவைகள் பின் அழிந்து போவதும் உலக இயல்பு.

சுருங்கச் சொல்லின் பெரியார் இராமசாமி நாயக்கர் அவர்கள் ஒழுக்கம், அன்பு, வாய்மை, நடுநிலைமை, மானம் என்பவைகள் முற்றுமுடையவர். இதற்குமாறாக இருப்பதாக எவரேனும் சொல்லவரின் வீணே வாய்ப்பறை சாற்றாது எழுது கோலைப் பழுதுகோலாக்காது அநுபவமாக எடுத்துக் காட்டவேண்டும்.

நமது பெரியாரான நாயக்கரின் முடிவான கொள்கைகள் என்னவெனில், போலி வேடதாரிகளையும், மதத்தின்பேரால், கடவுள் பேரால் ஏமாற்றும் போலிக் கொள்கைகளையும், கற்றும் சிவஞான மில்லாத கலதிகளையும், மக்களினிடையினின்றும் அடியோடு நீக்கி, மக்கள் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை யென்ற உண்மையை நிலை நாட்டுவதாகும். அது அவர்கள் பத்திரிகையையும் பிரசங்கத்தையும் குரோத புத்தியில்லாது நடுநிலை நின்று சுயமரியாதை உணர்வோடு ஆராய்வோர்க்கு உண்மை இனிது விளங்கும்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அரசாங்கத்தலைவரிடம் 500 ரூ சன்மானம் வாங்கியவர்களுமாகிய யோக்கியர்கள் பிரிட்டிஷ் சாமான்களைப் பஹிஷ்காரம் செய்வார்கள் என்று எந்த களிமண் உருண்டையாவது நம்பமுடியுமா என்றும் கேட்கின்றோம்

ஏனவே பிரிட்டிஷ் சாமான் பஹிஷ்காரம் என்பது வெறும்புரட்டு என்றும் அளவுகடந்துவழிந்தோடும் பித்தலாட்டம் கொண்ட காரியம் என்றும் சொல்லாமலிருக்க முடியாது என்பதே நமது அபிப்பிராயம்,

இவற்றுள் முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டிய விஷயமென்ன வென்றால், மகாத்மா என்ற பட்டம் தாங்கிய ஸ்ரீமான் காந்தியவர்கள் இவ்வேமாற்றத் திருவிழாவுக்கு வந்து பொது ஜனங்கள் எல்லோரும் மகாத்மா காந்தியும் இக்காரியங்கள் நிறைவேற உதவி செய்தார் என்றும் இத்தீர்மானங்களை ஆதரித்தார் என்றும் நினைக்கும்படியாக நடந்துகொண்டதோடு, ஒரு விதத்திலாவது தனது ஆட்சேபனையை அந்த இடத்தில் காட்டாததுமாகும்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

மம். இந்த இழவு பத்திரிகை ஒன்று முளைத்து ஊரிலுள்ள சிறு பிள்ளைகளையெல்லாம நாஸ்திகமாக்கிவிட்டது-

மகன்—'வெகு நன்றாயிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டு உடனே அம்மாள் இடுப்பில் சொருகி இருந்த சாவியை பிடுங்கிக்கொண்டு போய் பெட்டியைத்திறந்து நகையை எடுத்துக் கொண்டுவந்து கொடுத்து செட்டியாரை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான்.

பிறகு புருஷனும் பெண்ஜாதியும் ராகுகாலத்தில் அந்த செட்டி இடம் நகை வாங்கி வந்ததே ப்சகான காரியம். இதுவும் வரும், இன்னமும் எவ்வளவோ கெடுதியும் வரும். என்னை அடிக்க வேண்டு..........லே.

---

இறந்தவர்களை திருப்தி செய்ய

பார்ப்பனர் வயிற்றை

நிரப்பாதே.

---


### டிடக்டாவ்

அல்லது

### துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம.


இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் டி கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி., மதராஸ்,


---


### 10-வருஷ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது; நீடித்து உழைக்கக் கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக் கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானல் அனுப்பப்படும்.

பழனி கம்பெனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி 411 தங்கசாலை வீதி, சென்னை.

# விளம்பரம்.

கோயமுத்தூர் நகர சங்கம் 18-11-1927 ல் கூடிய கூட்டத்திலே பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றின தாக 1920 வருடத்திய சென்னை டவுன்பிளானிங் சட்டம் 10 வது பிரிவு (3) உட்பிரிவின்படி இதனால் அறிவிக்கப்படுகிறது

18—1—27 தேதியைக்கொண்ட நெம்பர் 484 தீர்மானம்— குறித்தகாலத்திலே 1, 2, 4, திட்டங்களைப்பற்றி ஆட்சேபணையாவது அல்லது ஆலோசனையாவது கிடைக்கப் பெருததாலும் கட்டிடமுள்ள இடங்களை 1, 2 திட்டங்களில் சேர்த்துக்கொள்ளலாமென்று சர்க்கார்தங்கள் 11—5—26 தேதியைக்கொண்ட நெ. 831 P, H. Mis. ஆர்டரின் சாங்ஷன் செய்திருப்பதாலும் 1, 2, 4 நம்பர் திட்டங்களை எவ்வித மாறுதலுமின்றி அமைக்க அல்லது ஒப்புக்கொள்ள இதனால் கடைசியாய்த் தீர்மானிக்கப்படுகிறது.

(ஒப்பம்) சி. எஸ். இரத்தின சபாபதி.
சேர்மன் சி. எம். சி,

## திட்டங்களின் எல்லைகள் நெ. 1. ரெட் பீல்ட் ஸ்கீம்.

வட எல்லை.--- அவநாசி ரோட் எஸ்- எப். நெ. 221 வடமேற்கு மூலையிலிருந்து எஸ். எப். நெ 198 வட கிழக்கு மூலைவரையில்,

கீழ் எல்லை— புலியகுளம் ரோட் எஸ். எப் நெ 198 வடகீழ் எல்லையிலிருந்து எஸ். எல். நெ 263 வடகோடி வரையில்,

தென் எல்லை,— புலியகுளம் ரோட் எஸ். எல். நெ, 263 வடகோடி மூலையிலிருந்து டி எஸ் நெ, 642 தென் மேற்கு மூலை வரையில்-

மேற்கு எல்லை — அலக்சாண்டர் ரோட்டில் டி எஸ் நெ 642 தென் மேற்கு மூலையிலிருந்து டி எஸ் நெ, 643 வடமேற்கு மூலை வரையில டி எஸ நெ 638 தென் மேற்கு மூலையிலிருந்து டி எஸ நெ, 635 தென் மேற்கு மூலை வரையில் ரேஸ கோர்ஸ ரோட் டி எஸ் நெ, 635, 634 உடையவும் எஸ் எப் நெ 212 213 உடையயும் மேற்கு எல்லை பிறகு எஸ் எப் நெ 221 ன் தெற்கும் மேற்கும்.

இந்த இடம் 317 ஏகர் விஸ்திரணமுள்ளது.

## நெ. 2. இராமநாதபுரம் திட்டம்.

வட எல்லை— எஸ் எப் நெ 13 தென் மேற்கு மூலையிலிருந்து எஸ் எவ் நெ 263 வடகோடி மூலை வரையில் புலியகுளம் ரோட்டின் வடஎல்லை எஸ் எவ் நெ 447 எ தென் மேற்கு மூலையிலிருந்து எஸ் எவ் நெ 515 தென் கிழக்கு மூலைவரையில் சவுரி பாளையத்துக்குப் போகிற இட்டேரியின் வட எல்லை,

கிழக்கு எல்லை— எஸ் எப் நெ 515 தென் கிழக்கு எல்லையிலிருந்து எஸ் எவ் நெ 174 தென் கிழக்கு மூலைவரையில் செல்லுகிற முனிசிபல் எல்லை;

தென் எல்லை— எஸ் எப் நெ 174 தென் கிழக்கு மூலையிலிருந்து டி எஸ் நெ 675 தென் கிழக்கு மூலை வரையில் திருச்சிறைப்பள்ளி அல்லது ராமநாதபுரம் ரோட்.

மேற்கு எல்லை... எஸ் எவ் நெ 424 மேற்கு எல்லையிலிருந்து எஸ் எவ் நெ 259 வடமேற்கு எல்லை வரையில் டி எஸ் நெ 675 ன் கிழக்கு எல்லை.

இந்த இடம் 268 ஏக்கர் விஸ்திரணமுள்ளது,

## நெ. 4. திட்டம். நெ. 6—7...19 வார்டுகளில்.

வட எல்லை— சத்தியமங்கலம் ரோட்டிலிருந்து மேட்டுப்பாளையம் ரோட் வரையில் செல்லுகிற குறுக்குப் பாதை கௌலிபிரௌன் ரோட்டுக்கு எதிர்ப்புறம் வரையில் மேட்டுப்பாளையம் ரோட்டின் கீழ் எல்லை தடாகம் ரோட் சந்திவரையில் கௌலி பிரௌன் ரோட்,

கிழக்கு எல்லை— சத்தியமங்கலம் ரோட்டுக்கு கிழக்கு எஸ் எவ் நெ 70 வட எல்லை எஸ் எவ் நெ 71 ன் கிழக்கும் தெற்கும் பிராமண எக்ஸ் டென்ஷனுக்கு மேற்கு ஆர் எஸ் என் 97 ன் கிழக்கும் தெற்கும் ஆர் எஸ் நெ 98 ன் கிழக்கும் தெற்கும் டி எஸ் நெ 10 வடக்கிலும் கிழக்கிலுமிருந்து அதன் கிழக்கு மூலைவரையில்.

தென் எல்லை— டி எஸ் நெ 10 ன் தெற்கு ஆர் எஸ் எப் நெ 95 1 லுள்ள காலீஸ்வரா ஆலை காம்பவுண்ட் சுவரின் கிழக்கும் வடக்கும் டி எஸ் நெ 1-எ 1-2 ன் கிழக்கும் வடக்கும் பிறகு ஆர் எஸ் நெ 263-க்கு தெற்கே ரயில் பாதையைக்கடந்து சென்று காட்டன்ஸ் பின்னிங் வீவிங் கம்பெனியில் காம்பவுண்ட் வட கிழக்கு மூலைக்கு எதிரான இடம் வரையில் டி எஸ் நெ 32 பி யின் கிழக்கு (ரயில்பாதை) காட்டன் ஸ்பின்னிங் வீவிங்கம்பெனி காம்பவுண்ட் சுவரின் வட பக்கம் டி எஸ் நெ 22 ன் தெற்கும் கிழக்கும் டி எஸ் நெ 16-17 க்கு தெற்கே மேட்டுப்பாளையம் ரோட் வரையில் மேட்டுப்பாளையம் ரோட்டுக்கு மேற்கிலிருந்து வெடர்பர்ன் தெரு நெ 4 வரையில் வெடர் பர்ன்தெரு நெ 4 வடக்கிலிருந்து டி எஸ் நெ 2191 கிழக்கு பக்கம் வரையில் டி எஸ் நெ 2191—2188 ன் கிழக்கும் தெற்கும் டி எஸ் நெ 2178 2—2279 1 க்கு தெற்கே பிறகு மேற்கே தாடகம் ரோட்டுக்குப் போகிற வரையில்.

மேற்கு எல்லை:— தாடகம் ரோட் இந்த இடம் 690 ஏக்கர் விஸ்திரணமுள்ளது.

ஒப்பம். சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், சேர்மன் சி, எம். சி.

## மதிப்புரை

### சர்வ வருண சமரச விளக்கம்.

திருச்சி திருவாளர் சி. பி. ராஜகோபால பாரதியார் அவர்கள் தாம் இயற்றிய சர்வ வருண சமரச விளக்கம் என்னும் புத்தகத்தின் பிரதியொன்றை நமது பார்வைக்கு அனுப்பியுள்ளார். இப்புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயத்தின் தன்மை புத்தகத்தின் பெயராலேயே விளங்குகிறது. இப்புத்தகாசிரியர் தாம் எடுத்தாளும் ஒவ்வொரு விஷயத்தையும் வேத, சுருதி, ஸ்மிருதி, புத்த அநுபவ, ஆராய்ச்சியுடனும், மேற்கோள்களுடனும் விளக்குகிறார். இப்புத்தகத்தில் பரந்து கிடக்கும் பல அரிய விஷயங்களில் திராவிடர் வரலாறு, ஆரியர் வரலாறு, ஆரியரால் புகுத்தப்பட்ட வேத, சாஸ்திர, புராண, ஜாதி, மத, வருண உயர்வு தாழ்வுகள், சடங்குகள் இவைகளை ஒழிக்கும் வழிகள், கலப்பு விவாகத்தாலுண்டாகும்நன்மை புலாலுண்ணுவதால் உண்டாகும் தீமை முதலியவைகள் யாவரும் அறிந்துகொள்ள வேண்டிய மிகமிக முக்கிய விஷயங்களாகும் இவைகளெல்லாம் இவ்வாசிரியரால் பொது நிலையிலிருந்து முதிர்ந்த அநுபவத்தைக் கொண்டு, நுட்ப ஆராய்ச்சி செய்து, சமூக சீர்திருத்தமே குறிக்கொண்டு மேல்நாட்டு கீழ்நாட்டு சரித்திரங்களைக்காட்டி எழுதப்பட்டவையாதலால் இப்புத்தகத்தைப் படித்த எவரும் அவரைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஆகவே சீர்திருத்தக்காரர் ஒவ்வொருவரும் அவசியம் இப்புத்தகத்தை வாங்கி வாசிக்கவேண்டியது.

இது 163 பக்கங்கள் கொண்டது. விலை ரூபாய் ஒன்றுதான். வேண்டுவோர் திரு சி பி ராஜகோபால் பாரதி 24, சௌந்திர பாண்டியம் பிள்ளை தெரு, திருச்சிராப்பள்ளி. என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

டுப்பட்டவர்கள் என்றும் அவர்களது கோபத்திற்கு ஆளாகக் கூடாதவர்கள் என்றும் நினைத்துக்கொண்டு சுதந்திரதில் கவலையற்று இருக்கின்றார்கள். உண்மையான பெண்கள் விடுதலைவேண்டுமானால் ஒருபிறப்புக் கொருநீதி வழங்கும் நிர்ப்பந்தக்கற்பு முறை ஒழிந்து இருபிறப்புக்கும் சமமான சுயேச்சைக் கற்பு முறை ஏற்படவேண்டும். கற்புக்காக காதலற்ற இடத்தைக்கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும் படியான நிர்ப்பந்தக்கல்யாணங்கள் ஒழியவேண்டும்.

கற்புக்காக புருஷனின் மிருகச் செயலை பொறுத்துக்கொண்டிருக்கவேண்டும் என்கின்ற கொடுமை ஒழியவேண்டும்.

கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மைக்காதலை மறைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்கின்ற கொடுமை ஒழியவேண்டும்.

எனவே இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிறவியில் உண்மைக்கற்பை இயற்கை கற்பைக் காணலாமே ஒழிய நிர்ப்பந்தங்களாலும் ஒரு பிறப்புக் கொருநீதியாலும், வலிமைகொண்டவன் வலிமையற்றவனுக்கு எழுதிவைத்த தர்மத்தாலும் ஒருக்காலும் காணமுடியாததுடன் அடிமைக்கற்பைத்தான் காணலாம். அன்றியும் இம்மாதிரியான கொடுமையை விட வெறுக்கத்தக்க காரியம் உலகத்தில் மனித சமூகத்தில் வேறு ஒன்று இருப்பதாக நான் சொல்ல முடியாது.

---

### நான்காவது ஆண்டு நிறைவு விழா.

1—1—1928 திருச்சிறுப்பள்ளி ஸ்ரீ மலைக்கோவில் தர்மகர்த்தரும் ஆனரெரி மாஜிஸ்டிரேட்டுமான திருவாளர் அரு. சு. வே. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி பெத்தாச்சிக்கு ஸ்ரீ மலைக் கோவிலில் நான்காவது ஆண்டு நிறைவு சிறப்ப விழா நடை பெற்றது. ஏழை ஜனங்களுக்கு அன்னமும் வஸ்திரம் வகையராவும் வழங்கப் பெற்றது.

U சாமிநாதம் பிள்ளை.

---

### ரயில்வே அதிகாரிகளின் சூழ்ச்சி.

விருதுநகர் தென்காசி ரயில்வே லயனிலுள்ள சங்கரலிங்கபுரம் ஸ்டேஷனில் தற்சமயம் உள்ள அதிகாரிகள் சங்கரலிங்கபுரம் ஜனங்களுக்கு ஏற்றுமதி இறக்குமதியாகக் கூடிய கூட்ஸ், பார்சல், லக்கேஜ் முதலானவைகளுக்கு ஷெ ஸ்டேஷன் மாஸ்டருக்கு அதிகமான சன் மானம் செய்யவேண்டுமென்றும் அப்படி செய்யாவிட்டால் சங்கரலிங்கபுரம் ஜனங்களுக்கு இடைஞ்சல் செய்யக்கூடுமென்றும் சொல்லி ஷெ ஸ்டேஷனுக்கு வட பாகம் சுமார் ஒன்றரை மைல் தூரத்திற்கு அப்பால் முத்துலாபுரம் என்னும் சிறிய கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுடன் கலந்து அவர்களை தம்முடைய இச்சக வார்த்தைகளால் மதிமயங்கச் செய்து மேற்படியார்களிடமிருந்து கொஞ்சம் பணத்தை அபகரித்து சங்கரலிங்கபுரம் என்ற ஸ்டேஷன் பெயரை முத்துலாபுரம் என்று பெயர் மாற்றம் செய்து கொடுப்பதாக சொல்லி மேற்படி முத்துலாபுரம் ஜனங்களால் ரயில்வே சம்மந்தமான உத்தியோகஸ்தர்களுக்கு மகஜர்கள் தயார்செய்து அனுப்பியிருக்கிறார்களாம். இவ்விதம் பார்ப்பனரல்லாத மக்களை மதிமயங்கச்செய்தும் ஆசை வார்த்தைகள் புகன்றும் பணம்பறிப்பதையே தொழிலாகக்கொண்டுள்ள பார்ப்பனர்களின் மாயவலையில் இனியாவது பார்ப்பனரல்லாத சகோதரர்கள் சிக்கிக்கொள்ளாதிருக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

மு. க. குருசாமி செட்டியார்,
சங்கரலிங்கபுரம்.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு பெரும் ஆடம்பரத்துடன் வேள்விகளைநடத்துவார்கள். பொருளகளெல்லாம் ஆயிரக்கணக்கான பார்ப்பனர்கள் வயிற்றுக்குட் செல்லுமேயொழிய செவியுணவுக்காவது, சமயக்கல்வி அபிவிருத்திக்காவது, ஒழுக்கச் சீர்பாட்டிற்காவது செல்வது கிடையாது. இத்தகைய விழாக்களுக்கு, ஆகக்கூடிய பல்லாயிரக்கணக்கான பணங்களைச் சேகரித்துவைத்துச் சரியான வழிகளில் பயன்படுத்தினால் நமது சமயம் கல்வி முதலிய அபிவிருத்தி வெகு மேன்மையடையும்.

பூஜை திருவிழாக் காலங்களில் வேசிகளை வைத்துக்கொண்டு அவர்கள் ஆடவும் பாடவும், அங்கு வழிபட வந்திருக்கும் தொண்டர்கள் மனதைப பற்றியிழுத்து நரகத்தில் வீழச்செய்யவும். எந்த சாஸ்திரத்திலாவது சொல்லியிருக்கிறதா என எவரும் வெளிப்படுத்துவார் இல்லை. தெய்வ ஆராதனை காலஙகளில் ஆராதிப்பவர் மனத்தைச்சோதிப்பதற்காக இவைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலோ அப்படிப்பட்ட முற்றுந் துறந்தவர்கட்குச் சோதனை வேண்டுவதில்லை. அன்னோர்கட்கு ஆலயங்களும் தேவையில்லை. ஆனால் சாதாரண மானிடர்களுக்கு ஆலயமும் அவசியம் எனப்படுகிறது, அங்கே நிலப்தம், நிஷ்களங்கம் இவைகள் அத்தியாவசியம். இல்லாவிடில் தாயுமானவர் போன்ற துறவிகளாலும், "சும்மாவிருக்கின்ற திறம் அரிது" எனக் கூடிய மனச் சாந்தியை பாமர ஜனங்களுக்குள் எவ்விதம் காணமுடியும். ஆகவே வேசிகள்போன்ற மோசமானவர்களை ஆலயத்தை விட்டு நீக்குவதே உத்தம தருமம். இம்மேன்மையான கொள்கையை அநுசரித்து மைசூர் பெருமானார் தன் அதிகாரத்திலிருந்து நீக்கிவிட்டனரென்றால் அன்னவர் பெருந்தன்மை என்னே! நமது தமிழ் நாட்டில் ஆலய அதிகாரிகள் எல்லாருங்கூடி இத்தகைய ஏற்பாடுகளை யறவே நீக்கி ஆலயங்களைப பரிசுத்தப்படுத்துவது முதலாவதான தர்மமாகும். பூஜாக்காலங்களிலும் திருவிழாக் காலங்களிலும் ஆன்ம விசாரம் பாமஞானம் முதலிய கொள்கைகளைத் தவிர்த்து வேறு எவ்வித லௌகிக விஷயங்களையும் ஆலயங்களில் உட்புகுத்தக் கூடாது. அப்போதுதான் சமயத்தின் தத்துவம்விளங்கிநிற்கும்.

---

### திருப்பூர் அங்கப்ப செட்டியார் இலவச வாசகசாலை.

இவ்வாசகசாலையின் ஆதரவில் 25-12-27 தேதி மாலை 6—30 மணிக்கு திருவாளர் முத்துசாமி பிள்ளை தலைமையில் கோவை பள்ளபாளையம் தமிழ் பண்டிதர் N. வையாபுரி பிள்ளை அவர்களால் 'கிருஷ்ணன் தூது' என்னும் விஷயமும், 1-1-28 மாலை 6-30 மணிக்கு திருவாளர் அ. கி. கருணாலய சுவாமிகள் தலைமையில் திரு P. M. R. மாணிக்கசுந்தரஞ் செட்டியாரவர்களால் "வாயில்லா நாயனார்" என்னும் விஷயமும் பிரசங்கிக்கப்பட்டன என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

# என். தண்டபாணி கம்பெனி

## கத்தர் டிப்போ,

சென்னை சைனுபஜார் ரோட்டு 292, நெம்பர் மாடிக் கடையில் சுமார் 7, 8 வருடங்களாக கதர் வியாபாரம் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று அபிவிருத்தியடைந்து வருகிறது. இதே இடத்தில் தான் ஆதியில் காங்கிரஸ் கத்தர் போர்டார் கத்தர் விற்று வந்தனர். பின்னர் திருப்பூர் R. M. S. சிதம்பர செட்டியார், முத்துசாமி செட்டியார் இதே விலாசத்தில் தங்கள் கத்தர் டிபோவை ஏற்படுத்தி விளம்பரம் செய்து சிறப்பாக நடத்தி வந்தனர். உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கத்தருக்காக வரும் ஏராளமான ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து பொது ஜனங்களுக்கு சௌகரியமான முறையில் நல்ல சுத்தமான சுயம் கத்தர் ஜவுளிகளை தேவையான மட்டும் டிலேயில்லாமல் சப்ளை செய்து கத்தர் வியாபாரத்தை இன்னும் அபிவிருத்தி செய்வதற்காகவே ஷை சைனுபஜார் 292 ல் உள்ள கதர் டிபோவை ஷை R. M. S. சிதம்பர செட்டியார் முத்துசாமி செட்டியர் 17-11-27 வியாழக்கிழமை முதல் நம் கம்பெனியிடம் ஒப்படைத்து விட்டனர் ஷை தேதி முதல் ஷை கதர் டிபோவை நாமே ஏக தேசத்தில் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொண்டு சைனுபஜார் ரோடு 292 நெம்பர் உள்ள விலாசத்திலேயே அதை வைத்து நடத்தி வருகிறோம். கத்தர் அபிமானிகள் அனைவரும் தங்களுக்குத் தேவையாயுள்ள கதருக்கு நம்மிடம் ஆர்டர் கொடுத்தால் உடனே நேரில் கவனித்து நல்லதாய் அனுப்ப திறமையான ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். பலவூர் கத்தர் ஜவுளி தினுசுகளும நம்மிடம் கிடைக்கும். அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் (சர்டிபிகேட்) அத்தாட்சி பத்திரம் இந்த கத்தர் டிபோவிற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சர்டிபிகேட்டை N- தண்டபாணி கம்பெனியார் பேருக்கு அமைச்சர் ஸ்ரீமான் S. ராமனுதம் பிள்ளை M. A. B. L அவர்கள் கொடுத்திருக்கிறார். அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படியும் விலைகளின்படியும்தான்நாமும் விற்கத் தீர்மானித்திருப்பதால் நம்மைவிட குறைந்த விலைகு கத்தர் சென்னையில் வேறெங்கும் கிடைக்கமாட்டாது- திருப்தியளிக்காத கத்தர் துணிகளை வாபீஸ் பெற்றுக் கொண்டு வேறு ரகமாகவோ, பணமாகவோ திருப்பிக்கொடுக்கும் நாணயத்தையும சென்னையில் நாம் ஒரு கம்பெனியார் மட்டும் கைக்கொண்டிருப்பது நண்பர்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும்- தனிப்பட்டவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் சில்லரையாகவும், மொத்தமாகவும். நேரில் அல்லது தபால், ரயில், கப்பல் மூலமாகவும் கோரிக்கைப்படி கத்தர் ஜவுளிகளை அனுப்பிவைக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் கத்தர் போர்டாரால் அனுமதிக்கப்பட்ட கமிஷன் முதலிய சௌகரியங்களும் செய்துகொடுக்கப்படும். முன்னேற்பாடிருந்தாலொழிய கதர் கடனுக்கு கொடுக்கப்படமாட்டாது. எல்லா வி. பி. ஆர்டர்களுக்கும் 100 க்கு 25க்குக் குறையாமல் முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி இல்லாத வெளிநாடு வாசிகள் பூரா பணத்தையும் முன்னாடி அனுப்பவேண்டும். நம்மை இதுவரை அபிமானித்து வந்த கனவான்களும் அவர்களின் நண்பர்களும் இனியும் நம்மை இக்கத்தர் துறையிலும் ஆதரித்து ஊக்கமளிக்குமாறு அருள்புரியும்படி எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றோம்.

**N. தண்டபாணி கம்பெனி**

கத்தர்டிபோ, நெ. 292, சைனுபஜார ரோடு, மதராஸ்.

## புத்தகசாலை

### (வகையரா)

### அறிக்கை.

இந்த கம்பெனியின் நல்ல நிமையைக் குறித்து நான் அடிக்கடி எழுத நேர்வதற்கு மிகவும் சந்தோஷப்படுகிறேன். சென்னையில் N. தண்டபாணி கம்பெனி 1925 ௵ ஜூலை ௴ 27 ௳ யன்று பிராட்வே 31 நெம்பர் தமிழ் நாடு ஆபீசில் பிறந்து 1926 ௵ பிப்ரவரி மாதம் 5ந் தேதி முதல் பவழக்காரத் தெரு 6-99 நெ. வீட்டில் வளர்ந்து, 1927 வருஷம் நவம்பர் மாதம் 17 ந்தேதி முதல் மதராஸ் சைனுபஜார்ரோடு 292 நெம்பர் மாளிகையில் சிறப்புடன் பெருகி வாழ்ந்து வருகின்றது- என். தண்டபாணி கம்பெனியின் கத்தர் டிப்போவிற்குப் பக்கத்தில் உள்ள பெரிய இடம் நமது கம்பெனியில் ஏற்கனவே நடத்தி வந்த மற்ற எல்லா சில்லரை வியாபாரங்களையும் பெருக்கமாய்ச் செய்வதற்காக வென்று புதியதாய் அமர்த்தப்பட்டிருக்கிறது. (17-11-27) முதல் பவழக்காரத்தெரு 6/99. ல் இருந்து, N. தண்டபாணி கம்பெனி, நெ. 292 சைனுபஜார்ரோடு, மதராஸ் என்ற விலாசத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. மேற்படி கம்பெனியின் தபால் பெட்டி நெம்பரும் 292 தான். இனிமேல் கடிதம், இன்ஷியூர், மணியார்டர், ரிஜிஸ்டர் முதலியன எல்லாம் மேற்கண்ட விலாசத்திற்கே அனுப்பப்படல் வேண்டும். இக்கம்பெனியில் சிறபபாக கத்தருடன் கூட பொதுவாக புத்தகங்கள், மருந்துகள். ஷாப் சாமான்கள் முதலிய எல்லா இதர சாமான்களும் நல்லதாய் கிடைக்கும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் அன்பர்கள் தங்களுக்குத் தேவையானவைகளுக்கு இக்கம்பெனிக்கே ஆர்டர் கொடுத்து N. தண்டபாணி கம்பெனியை எப்பொழுதும் போல் ஆதரித்து வருமாறு மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். N. தண்டபாணி கம்பெனியை தோற்றுவிக்கக் காரணராயிருந்த டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களையும், இக் கம்பெனியைத் திறந்துவைத்த ஸ்ரீ திரு. V. கலியாணசுந்தர முதலியார் அவர்களையும், இக்கம்பெனியின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ள ஸ்ரீமான் E. V. இராமசாமி நாயக்கர் அவர்களையும், இக்கம்பெனியை பொதுவாக அபிமானித்துவந்த நண்பர்களையும், சிறப்பாக ஆதரித்து வந்த வெளிநாட்டு அன்பர்களையும், என் மனமொழி மெய்களால் வணங்கி இச்சமயத்தில் அவர்களுக்கு என் நன்றியறிதலான வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

**N. தண்டபாணி பிள்ளை**

உரிமையாளர்,

என். தண்டபாணி கம்பெனி.

292, சைனுபஜார் ரோடு, மதராஸ்

(4-ம் பக்கத் தொடர்ச்சி).

யிற் குறைந்தாருமல்லர். தம்மைக்காத்துக்கொள்ளும திறமுடையவர்களாகவே விளங்கினர்கள். இதனை (7) "ஆடவர் பெண்களைச் சிறைசெய்து அவர் கற்பைக் காக்கும் காவல் என்ன பலனைத் தரும்? பெண்கள் கற்பாற்றம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளுவதே சிறந்ததாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனுலறியலாம்.

தன் கணவனை வழிபாடு செய்யும் பெண்களுக்கு இம்மையிலும் இன்பமும் புகழும் கிடைப்பது போலவே மறுமையிலும் சிறப்புக்கிடைக்குமாம். அவர்கள் மறுமையில் தேவர்களாற் பெரிதும் கொண்டாடப்பெறுவர். ஆகையால் இம்மை மறுமை இன்பங்களைக் கருதிய பெண் மக்கள் தங்கள் தலைவர்களுக்கு வழிபாடு செய்யக் கடமைப் பட்டிருக்கின்றனராவர். இதனை (8) "பெண்டிர் தம் கணவனுக்கு வழிபாடு செய்யப் பெறுவாராயின் தேவருலகில் தேவர்களால் பெருஞ்சிறப்படைவர்" என்று திருவள்ளுவர் கூறுகின்ருர்.

கற்புடைய மனையாளைப் பெற்றவன் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை. அவனை யாரும் ஒன்றுஞ்செய்யவியலாது. அவனுடைய இல்வாழ்க்கையும் கவலையற்ற இன்ப வாழ்க்கையாக இருக்கும் அவனைப்பற்றி மற்றவர் ஒரு பழிச்சொல்லும் கூற முடியாது. ஆகையால் அவன் தன் பகைவர் முன்னும் ஆண் சிங்கம் போல் இறுமாந் துலவலாம். தீயொழுக்கமுடைய மனைவியைப் பெற்றவர்கள் எப்பொழுதும் தலை நிமிர்ந்து நடக்க முடியாது. யாரைக் காணினும் தலைகுனிந்து தான் செல்ல நேரும். அவனைப் பிறர் பழிக்கவும் இடமுண்டு. ஒருவன் தன் மனைவியைப்பற்றிப் பிறர் இகழ்ந்து பேசுதலைக் கேட்கும்போது அவன் மனத்திலுண்டாகும் துயரத்திற்களவுண்டோ? கோபத்தையறியாத ஒருவனையும், அவன் மனையாளைக் குறித்து ஏதோனும் கடுஞ் சொற் கூறினல் உடனே அவனுக்கு கோபம் பொங்கியெழுவதைக் காணலாம். ஒரு ஆடவன் மானத்தைக் காப்பாற்றுகின்றவன் மனையாளே யாவாள். இதனை (9) "புகழை விரும்பும் மனைவியைப் பெருதவர்க்கு, தம்மையிகழ்ந்துரைக்கும் பகைவர் முன் ஆண் சிங்கம் போல் நடந்து செல்லும் பெருமித நடை இல்லை" என்று திருவள்ளுவர் கூறுவதனுலறியலாம்.

இல்லற வாழ்க்கைமங்களமாக இருப்பது மனையாளிடமுள்ள நற்குண நற்செயல்களால். அச்செயல்களுக்கு நல்ல அணிகலம் நல்ல மக்களைப் பெறுதலாம். மக்களற்ற வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாகாது. இதனை (10) "மனையாளிடமுள்ள நற்குண நற்செய்கைகளே மங்கலமென்று கூறுவர். அந்த நற்குண நற்செயல்களுக்கு நல்ல ஆபரணம் மக்களைப்பெறுதலாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதாலறியலாம்.

மேற் கூறியவாற்றல் இல்லற வாழ்க்கைக்குரிய பெண்கள் மேற் கொள்ளவேண்டியவை யாவையென்பதை யறிந்தோம். அத்தகைய சீரிய குணங்களையும், செயல்களையும் அடைய வேண்டுமாயின் பெண்மக்களுக்குக் கல்வி முதன்மையானதாகும். கல்வியற்ற பெண்கள் இச்செய்திகளை எங்ஙனந் தெரிந்து கொள்ள வியலும்? ஆதலால் தமிழ் மக்கள் யாவரும் தம்தம் பெண்களுக்குக் கல்வி பயிற்றுவித்து அவர்களை வீரமகளிராக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். மேற் கூறியவைகளை ஆராய்ந்தால் பெண்மக்கள் உரிமையற்றவர்கள் என்று கூறும் வழக்கு நிலைநிற்காது. உலக வாழ்க்கைக்கு அவர்களே இன்றியமையாதவர்கள் என்பதும் பெறப்படும்.


## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமானகதர்ஜவுளி தினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)



## மிருத்யுஞ் ஜெய ஸம்ரக்ஷணீய வைத்தியசாலை, மாயவரம்.

அமிர்த சஞ்சீவி ரசாயனம். விலை சேர் 1-க்கு ரூ. 4.

இது சகல வியாதிகளுக்கும் அமிர்தம் போன்ற தக்க கைகண்ட மருந்து. விசேஷமாய் காஸம், க்ஷயம், பிரமேகம் (நீர் ரோகம்) குன்மம், சூலை, குஷ்டம், ரணம், மேகநீர், சொறி, கிரந்தி வெட்டை இவைகளுக்கும், ரெத்தம் குறைந்து இந்திரியம் நீத்துப்போய் இரவில் தூக்கமின்றி தவிப்பவர்கட்கும் இன்றியமையாதது.

காமகல்பக ரசாயணம். விலை சேர் 1-க்கு ரூ. 7—8—0.

இது நித்யம் இரவில் சாப்பிட்டு பால் சாப்பிட்டால் சுக நித்திரையும் சம்போக சாமர்த்தியமும் உண்டாவதுடன் மனதிற்கு சந்தோஷத்தையும் தேகத்திற்கு பலத்தையும் கொடுக்கும். தவிர அஜீர்ணம், கிரகணி, குன்மம், சூலை, பித்தவாயு, நீர் ரோகம், வெட்டை, காஸம், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கும் உத்தமமான மருந்து.

DR. T. S. நாயர், M. S. வைத்தியசாலை, மாயவரம்.



## அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள சம்பிரங்குகள் மார்க்குகள். தயாரிலிருக்கிறது. இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளிதினுசுகளில் வெள்ளை 100 கெம்பர் முதல் 200 கெம்பர் வரை நூல்களில் 5 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் ஷை, கெம்பர்களில் 2-½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டு நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஸ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 2-½ அகலம் 18 முழம் நீளம் பல விதமான பேட்கரையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினல் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி, S. வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி & ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.


## மருத்துவ குலத்தவர்களே நன்முயற்சி செய்யுங்கள்.

சகோதரர்களே! ஒவ்வொரு வகுப்பாரும் தம்தம் முன்னேற்றங் கருதி அடிக்கடி மகாநாடு கூட்டித் தீர்மானங்கள் செய்து அவைகளை அமுலுக்குக் கொண்டு வந்து காரிய சித்தியடைந்து வருகின்றனர். நாமும் சில மகாநாடுகள் கூட்டி கட்டுதிட்டங்களுடன் சின்னாள் வாழ்க்கை நடத்தி வந்தோம். ஆனல் இந்த இரண்டொரு வருடங்களாக நாம் மகாநாடு கூட்டாததால் நம்குலத்தவர்கள் கட்டுதிட்டங்கள் குலைந்து நாமும் நம் தலைவர்களும் பிறரால் குறை கூறப்பட்டும் இழப்பட்டும் வருகிறோம். எங்குலத்தவர்களே! நீங்கள் இதை உணரவில்லையா? உணர்ந்தால் முன்வந்து பழய உணர்ச்சியும் ஒற்றுமையும் ஊக்கமும் கொண்டு மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யுங்கள். ஒவ்வொரு மருத்துவ குல அபிமானியும் தம்தம் தொழிற்சாலையிலோ வீட்டிலோ ஒரு உண்டிப் பெட்டி வைத்து தினந்தோறும் தங்களாலியன்ற ஒரு சிறு தொகையாவது சேர்த்து வந்தால் மகாநாட்டுக்கும் மற்றும் நம் குல அபிவிர்த்திக்குமான செலவு போக மிச்சமும் இருக்கும். இதைவிட லேசான முயற்சி வேறில்லை. உண்மைத் தொண்டர்களே! தலைவர்களே! குலாபிமானிகளே! இந்த நன் முயற்சியைச் செய்வீர்களா?

கு. வி. சு. முத்துமணி மருத்துவர்,
இலங்கை.

**மநு நீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை.**

3 ம்பக்கத் தொடர்ச்சி

க்கு செய்வதே தருமமென்றும் விதித்த இந்து சாஸ்திரத்தின் தானதர்ம வேறு பாட்டைப்பற்றிச் ஜனசமூகங்களுக்கு எவ்வளவு தெரியும்? அதைத் தெரிந்தவர்கள் எவ்வளவு தூரம் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். தெய்வத்தையும் சாஸ்திரத்தையும் புராணத்தையும சொல்லி எல்லாம் பாப்பானுக்கே கொடுத்து விடுங்கள் என்று தானே விளக்கியிருக்கிறார்கள், சாஸ்திரமோ யாருக்கும் தெரியாது; படிக்கவும் கூடாது. சுவாமியைச் சொல்லுகிறவனும் சுவாமியைக் கண்டதில்லை. நாம் காணவேண்டுமானால் அக்கினியில் - குளித்தெழவேண்டும். இதையெல்லாம் ஆலோசித்துத்தான் 'குடி அரசு' பார்க்கக்கூடாத சாஸ்திரமும் பாப்பான் சுவாமியும் நமக்குப்பலனை உண்டுபண்ணாதென்கிறது. கோவிலுக்கு போகும் வழியில் வியாதியினாலோ சோர்ந்தோ கீழே கிடப்பவனுக்குத் தண்ணீர் கொடுத்தால் அதனால் ஏற்படும் தீட்டு கோவிலுக்குப் போவதைத தடுத்து விடுமென்று நினைத்து முகத்தைத் திருப்பி கூட அவனைப்பார்க்காமல் போய் விடுகிறார்கள். பழனிக்கும் திருப்பதிக்கும் போகிறவர்களில் வியாதியால் வழியில் அநேக ஜீவகாருண்ய பக்தகோடிகளின முன்னணியில் தாகத்திற்கு தண்ணீரில்லாமல் செத்தவர்கள் அநேகர் கோவிலுக்குப் போகையில் தீட்டுப்படாமல் சுவாமியைப் பார்க்கவேணடும் வருகையில் பிரசாதம் தீட்டுப் படாமல் சடுதியில் வீடுவந்து சேரவேண்டும். மத்தியில் அரகரா கோவிந்தா வென்பதோடு ஜீவகாருண்யம் முடியவும் வேண்டுமே ஒழிய மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமையைப்பற்றி பக்திமான்கள் படிக்கவில்லையே! சிலரிடம் வாய் பேசாமலும் சிலரைப்பார்க்காமலும் சிலரைத் தொடாமலும் தான் மட்டும் மறைப்பு கட்டி உண்ணும் இந்து மதத்திற்கும் ஜீவகாருண்யத்திற்கும் பொருத்த முண்டாகுமா? வேத மத சாஸ்திரப்படிப்பில் மலையாள தேசம் பேர் போனதே. அந்த தேசத்தில் மனிதனை மனிதன் செய்யும் கொடுமைக்குக் காரணம எந்த இந்து மதமோ அந்த இந்துமதம் ஒழிந்தாலல்லவா ஜீவகாருண்யம் நிலைக்கும். படித்தவர்களும், பக்திமான்களும், உயர்ந்த ஜாதிக்காரர்களும், ஜீவகாருண்யத்தை தங்கள் வாயளவில் சொல்லி, கோவில் பூசை முதலானதுகளை பிராமணனுக்கும்தான தர்மம் இவர்களுக்குச் செய்ய வேண்டியது பணக்காரர்களுக்கும் உபதேசித்து இத்துடன் ஜீவகாருண்யத்தை முடித்துவிடும் இந்து மதம் ஒழிய வேண்டுமென்றுதான் 'குடி அரசு' சொல்லுகிறது.

## விஜயபுரம் சமரச சாமாஜம் எட்டாவதாண்டு விழா

மேற்படி சமாஜத்தின் எட்டாவது ஆண்டின் பூர்த்தி விழா சென்ற கார்த்திகை மாதம் ஸ்ரீமான் பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை M. A. B. L. அவர்கள் தலைமையின் கீழ் வெகு விமரிசையாக நடை பெற்றதாகவும் அச்சமயம் பல அறிஞர்கள பல அரிய சொற்பொழிவு நிகழ்த்தியதாகவும் சமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான் ப. ராஜகோபால செட்டியார் தெரிவிக்கிறார்.

**சூத்திரன் என்று உன்னைச் சொல்லிக் கொள்ளாதே.**

**சூத்திரன் என்றால் வேசி மகன் என்று பொருள்.**


# மின்சார ரசம்.

## சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம்.

அநுபானமில்லை! மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்றதென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

REGISTERED TRADE MARK MINSARA RASAM

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! உங்களை ஆச்சரியமுறச் செய்யும்!

கேட்லாக் இனும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.



பழநி சி. எம. சாமி.

# குருதாம்பரபஸ்பம்

## ஒன்றுதான் உயர்தரமானது.

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டன. ஆருத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்ல வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

100 வேளை பமபமும் அனுபானமும் விலை ரூ. 50. 50 வேளைக்கு ரூ 25. ஏழைகளுக்குப்பாதிவிலை. வி. பி. வேறு.

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒன்றரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான். மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான். ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நீர். மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை

# மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷ கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷ கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ணா ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்.

## கட்டி வெள்ளி நகைகள்


இனம்! 1928-வருஷ காலண்டர் இனம்!
தப்புரவான வேலைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு செயின், அரணாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறுக்களும், இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகையறுக்களும், அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறுக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 கெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்

விலாசம்,
தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்
சறுப் & ஜவுளி வியாபாரம்.
குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம் "சராப்" சேலம்

## டேபில் டைம்பீஸ் இனம்!!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்ச் கம்பெனி,
15 A-பீட்டர்ஸ். ஜி. டி மதராஸ்.

## விளம்பரம்.

வியாபாரிகளே!

உங்களுடைய வியாபாரம் செழிப்பாக நடக்க வேண்டுமா? அப்படியானால் நீங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும். உங்களுடைய விளம்பரத்தை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அதை எப்படி எழுதினால் ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்யுமோ அந்த வழியில் எழுதி அழகாகப் பிரசுரிப்போம் குறைந்த விகிதம் வேண்டுமானால் நீங்கள் எங்களுக்குத் தான் எழுத வேண்டும். வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்வதே

வாஸ் அட்வர்டைஸிங் சர்விஸ்,
தபால் பெட்டி 119, மதராஸ்.

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால்தயார்செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், சிகாற்றதும், நற்சாட்சியும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும், சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கப் பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)




வெளி வந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய்விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும்சிரமப்பட்டு அணாமுதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பலபோலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும் இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோபயிண்டு விலை ரூபாய் 2 வி. பி. தபால் செலவு அணா 8

தி. இராஜகோபால் முதலியார், தங்கசாலைத் 302 தெரு, மதராஸ்

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந் நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை. பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?

31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அபிப்பிராயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அபிப்பிராயம்.

32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.

33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான போன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் காணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

வாஸன் புஸ்தகசாலை,
தபாற் பெட்டி நெ. 119
97. அன்னபிள்ளை தெரு, ஜி. டீ. மதறாஸ்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.